Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 28 சனிக்கிழமை (12.01.2013) பக்கங்கள் 20 ஓசை - 104
















# பதவி பறிபோவது உறுதி நிறைவேறியது தீர்மானம்

## ஜனாதிபதியின் அறிவிப்பு விரைவில்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அவரது பிரதம நீதியரசர் பதவி பறிபோவது உறுதியாகிவிட்டது.

நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஜனாதிபதியிடம் நேற்று இரவு கையளிக்கப்பட்டிருக்கிறது.

மிக விரைவில் ஜனாதிபதி அரசியல் யாப்பின் படி பிரதம நீதியரசரைப் பதவி நீக்குவதற்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் நேற்று இரவு நடந்த வாக்கெடுப்பில் அறிக்கைக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 49 வாக்குகளும் கிடைத்தன.

எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் 106 மேலதிக வாக்குகளினால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைபதவியிலிருந்து நீக்கும் யோசனை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நிறைவ டைந்ததை அடுத்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநயக்கவுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த நாடாளுமன்ற அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் சந்திம

(19) ஆம் பக்கம் பார்க்க

## நடவடிக்கை எடுக்க முடியாது

பிரதம நீதியரசருக்கு எதிராக நேற்றைய தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நடவடிக்கை எடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்

(19) ஆம் பக்கம் பார்க்க

## துயரமான நாள்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக நேற்றைய தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்ட ரீதியானதல்ல என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இந்தத் தேசத்திற்கு துயர

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா கவலை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மீதான கண்டன பதவி நீக்கத் தீர்மானம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமை குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி தலைமை நீதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பிரதம நீதியரசருக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் கறுப்பு வெள்ளிப் போர்



நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலை நாட்டப்பட வேண்டுமானாலும் நீதித்துறையின் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டுமானாலும் பிரதம நீதியரசருக்கு எதிரான நடவடிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதி ரான குற்றவியல் பிரேரணையை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி சட்டத்தரணிகள் கறுப்புத்துணியை முகத்திலும், தலையிலும் அணிந்து கொழும்பில் உயர் நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் உச்சநீதிமன்றத்திலும் அவர்கள் கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டிருந்தனர்.

சட்டத்தரணிகள் நேற்றைய தினம் முன்னெடுத்த போராட்டத்தை கறுப்பு வெள்ளியாகவும் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

# வாக்கெடுப்பில் பங்குபற்றாத மூன்று அமைச்சர்கள்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிரான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில், அமைச்சர்களான டியூ குணசேகர, சந்திரசிறி கஜதீர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஆளுங்கட்சி எம்.பி.யான ரஜீவ விஜேசிங்க வாக்களிக்கவில்லை, எதிரணி உறுப்பினரான ஸ்ரீரங்கா எதிர்த்து வாக்களித்தார் இதன் போது ஐக்கிய தேசியக் கட்சியினர் மேசையில் தட்டி வரவேற்றனர்.

எனினும் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வை.ஜி. பத்மசிறி, அரசாங்கத்துடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

# பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வடக்கிலிருந்தும் படையெடுப்பு

(கொழும்பு)

50 ஆயிரத்து 821 பட்டதாரிகளுக்கு இன்றைய தினம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள விசேட நிகழ்வில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ள நிலையில் வடக்கில் இருந்தும் அண்மையில் பயிலுநர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் நேற்றைய தினம் கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளதாவது,

10000 தமிழ் பட்டதாரிகள் உட்பட 50821 பேருக்கும் விரும்பிய இடங்களில், விரும்பிய துறைகளில் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சரவை அனுமதிக்கு அமைய 50 ஆயிரத்து 824 பட்டதாரிகளும் கடந்த வருடம் அரசசேவையில் இணைக்கப்பட்டு ஒருவருட காலப்பயிற்சியைப் பெற்று வருகின்றனர். ஒருவருட பயிற்சியைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

அவர்களுக்கு விரும்பிய மாவட்டத்தில், விரும்பிய துறையில் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பயிற்சிகளைப் பெற்ற அனைவரையும் இம்முறை. சாதாரண நீதிகளுக்கு மாறாக மீண்டும் விண்ணப்பம் கோராமல், நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தாமல் நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்தி

(19) ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டில் பெய்த மழையால் 5,867 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பெய்த மழை மற்றும் அதனாலேற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 5 ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 979 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையின் படி ஊர்காவற்றுறை பிரதேசத்தில் ஆயிரத்து 6 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 318 பேரும், பருத்தித்துறை பிரதேசத்தில் 802 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 839 பேரும், வேலணை பிரதேசத்தில் 393 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 358 பேரும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேரும், கர

(19) ஆம் பக்கம் பார்க்க

# பொதுநலவாய மாநாட்டில் அவுஸ்ரேலியா பங்குபற்றும்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதாக அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது. மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, உறுதி செய்திருந்தார் என உயர்ஸ்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நடைபாதை வியாபாரிகளுக்கு காலக்கெடு; கிளிநொச்சியில் அதிரடி நடவடிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் எதிர்வரும் தைப்பொங்கல் வரை தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் அதன் பின்னர் வியாபார. நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது என கரைச்சி பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தைப் பகுதியில் பொதுமக்களுக்கும் சந்தை வியாபாரிகளுக்கும் இடையூறை ஏற்படுத்தும் வகையில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக பிரதேச சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதாவது பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளுக்கு பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் உயரதிகாரிகள் இவ் வியாபாரிகளின் வியாபாரம் தொடர்பாக பிரதேச சபையிடம் எடுத்துக்கூறியதை அடுத்தே வியாபாரம் செய்வதற்கு வியாபாரிகள் அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே,77)



மாத்தறை மாவட்டத்தில் சுயதொழில் புரியும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவியளிக்கும் செயற்திட்டமொன்றை மாத்தறை சமாதி சமூக அபிவிருத்தி மன்றமும் ஜப்பான் ஸ்ரீலங்கா தோழமை சங்கமும் இணைந்து ஆரம்பித்துள்ளன. சமாதி மன்றத்தின் தலைவர் மற்றும் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மகளிர்களுக்கான பாதணிகளைச் செய்வதற்கான உபகரணங்களைப் பகிர்ந்தளிப்பதைக் காணலாம். (95)

## மண்டைதீவுக்கு மின்சாரம் மிக விரைவில் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின் இணைப்பு வேலைகளில் 95 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்திருப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இன்னமும் எஞ்சியுள்ள ஐந்து வீதமான மின் இணைப்பு வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருவதாகவும் அவ்வேலைகள் பூர்த்தியடைந்ததும் அமைச்சின் அனுமதி கிடைத்ததும் மின் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மண்டைதீவுப் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வேலைகள் கடந்த வருடம் இலங்கை மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுச் சந்தி ஊடாக மண்டைதீவுக்கு இந்த மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த இணைப்பு வேலைகளில் 95 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் மிகுதியாகவுள்ள ஐந்து வீதமான வேலைகளே நடைபெற்று வருகின்றது. அமைச்சின் அனுமதி கிடைத்ததும் மின் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## வடக்கில் மேலதிக பேருந்து சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

வடக்கில் மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை ஒன்றினை இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள், போக்குவரத்து சபை உபதலைவர் வி.விமலரட்ணவிடம் முன்வைத்துள்தாக போக்குவரத்து சபை முகாமையாளர் அஸ்ஹர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு யாழ். கோண்டாவில் டிப்போவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே யாழ், காரைநகர், முல்லைத்தீவு, பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார் வவுனியா மாவட்ட பேருந்து சங்க ஊழியர்கள் இக்கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபை உபதலைவர் வி.விமலரட்ணவுடன் கலந்துரையாடிய அவர்கள், தற்போதுள்ள ஒரு பேருந்தின் வருமானம் போதாமல் உள்ளது. மேலதிகமாக பேருந்துகளை வழங்கினால் அவற்றின் மூலம் வருமானத்தினை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பு இருக்கின்றத என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், தமது குறைபாடுகள் குறித்தும் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளனர். (25)

## வீதி விபத்தால் மின்கம்பம் சேதம் வாகன உரிமையாளர்கள் நட்டஈடு செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நுணாவில் சந்திப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான கன்டர் ரக வாகனமொன்றும் அதே நாள் மாலை 7.10 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான பிக்கப் ரக வாகனமொன்றும் சாவகச்சேரி ஊடாக கரந்தன் வரை செல்லும் லக்சபான நீர் மின்விநியோக உயர் அழுத்த மார்க்கத்தில் மின்கம்பங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியதால் மின்சார சபையின் உயர் அழுத்த மார்க்கத்தில மின் கம்பங்கள் இரண்டு மீளப் பயன்படுத்த முடியாதளவுக்கு சேதமாக்கப்பட்டன.

இவ்விபத்தினால் மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டஈடாக மேற்படி இரு வாகன உரிமையாளர்களிடமிருந்தும் ஒரு இலட்சம் ரூபா நட்டஈட்டு பெறப்பட்டது. இந்த மின்தடையால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மின்சார சபை வருந்துகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்விக் கண்காட்சி

செ‌ன்.ஜோன்ஸ் கல்லூரி தனது 190 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முன்பள்ளி, ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான (மொன்ரசறி) கல்வி முறையில் கற்பித்தலுக்குரிய கண்காட்சி கடந்த 4 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதனை பேராசிரியர் பிரேமராஜ் மற்றும் வைத்திய கலாநிதி சீலா பிரேமராஜ் ஆகியோர் திறந்துவைத்தனர். அவர்களால் திறந்துவைக்கப்பட்ட இக்கண்காட்சியின் தொடர் நிகழ்வு இன்றும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து செ‌ன். ஜோன்ஸ் கல் லூரியில் நடைபெறும்.

காலை 8.00 மணி தொடக்கம் மாலை 1.00 மணிவரை இதனைப் பார்வையிடலாம். முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் இதனைப் பார்வையிடலாம். அனுமதி இலவசம். (20)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு மேற்கு பொன்னாலை சமூக முன்னொமுக்க குழுவின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கே.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட 16 அணிகள் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 9.30 மணிக்கு வலிகாமம் தெற்கு மேற்கு பொன்னாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தொல்புரம் தியவத்தை அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணியும், பின்னாளி கரும் மாதா அணியை எதிர்த்து மூளாய் விக்டோரியா அணியும், சுழிபுரம் லெவின்ஸ்ராரை எதிர்த்து சங்கானை ஐக்கியமும், வடக்கு பிராய் அம்பாளை எதிர்த்து மாகியப்பிட்டி அணியும் மோதவுள்ளன. (12)

## வாழ்வின் வளம் சேர்க்க வாழ்வாதார உதவிகள்



பிரன்ட்ஸ் நிறுவனத்தால் மக்களுக்கான வாழ்வாதார உதவியாக சேந்தாங்குளம் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான 17 வலைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வலிகாமம் வலய ஈ.பி.டி.பி இணைப்பாளர் ஜீவன், வலி.வடக்கு, வலி.தெற்கு ஈ.பி.டி.பி அமைப்பாளர் அன்பு, உதவித் திட்டப் பணிப்பாளர் சிவகுமார், கடற்றொழில் சங்கத் தலைவர் பயஸ் லோகதாஸ், இராணுவ மேஜர் அதாவுல்லா, பிரன்ட்ஸ் நிறுவன இணைப்பாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு வலைகள் வழங்குவதையும் வலிகாமம் வலய ஈ.பி.டி.பி இணைப்பாளர் ஜீவன் உரையாற்றுவதையும் காணலாம்.


### சிறு விளம்பரங்கள்

**நவம்பர் மாத "வலை" வெளிவந்துவிட்டது**

சமகால பொது அறிவு பத்திரிகைத் தொகுப்பான வலையின் நவம்பர் மாத இழை -14 வெளிவந்துவிட்டது.


யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொகுப்பாசிரியர் : சி.என்.எச். சாள்ஸ். தொடர்புக்கு : 0776913337 (C/1779)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- க.சிவறட்ணம் அல்லது சிவராசா, றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/163)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்சி பேதமின்றி சேவையாற்ற வேண்டும்



வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்பதற்கு அப்பால் ஒன்று சேர்ந்து சேவை செய்ய வேண்டியது நம் எல்லோருடைய பொறுப்பாகவிருக்கின்றது என நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வெள்ள அனர்த்தம் பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த வெள்ள அனர்த்தம் கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக வட மாகாணத்தின் வெள்ள அனர்த்தம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் மாவட்ட செயலகங்கள் எல்லாம் ஒன்றிணைந்து கணிசமான அளவு உதவியிருக்கின்றன.

வட மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களின் பொழுது ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கியதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைப்பதை உறுதி செய்திருக்கின்றார். குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் உள்ள குளங்களில் வெள்ள நீர் நிரம்பிப் பாய்கின்ற நிலைமையால் மக்கள் தங்கள் குடியிருப்புக்களிலிருந்து இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியிருக்கின்றது.

வவுனியாவிலே கடந்த சில வாரங்களாகப் பெய்து வருகின்ற மழையினால் 190 குளங்கள் அழிவைச் சந்தித்துள்ளன. நான்கு அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்திருக்கின்றன் 24 வீதிகள் அழிவடைந்திருக்கின்றன. மொத்தமாக 14,551 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இவற்றில் 4,551 குடும்பங்கள் விவசாயக் குடும்பங்கள் ஆகும். வவுனியா மாவட்டத்திலே 292 வீடுகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. கிட்டத்தட்ட 11,523 ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன. மேட்டுநிலப் பயிர்ச் செய்கைகூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. 3,675 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட மரக்கறிச் செய்கை, பழப் பயிர்ச் செய்கை மற்றும் தானியப் பயிர்ச் செய்கைகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 18,155 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 2,639 வீடுகள் அழிந்துள்ளன. இவை எல்லாம் மீள்குடியேறிய மக்களின் தற்காலிக வீடுகள். இதனால் இந்த மக்கள் மிகுந்த நெருக்கடியைச் சந்தித்திருக்கின்றார்கள். அத்துடன் 7,219 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவுக்குள்ளாகியிருக்கின்றது. 313 ஏக்கர் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இம்மக்களுக்கு கூட்டுறவுத்துறை வட மாகாண ஆளுநரின் உதவியுடன் பால்மா பைக்கட்டுக்கள் உட்பட பல்வேறு பெறுமதிமிக்க உணவுப் பொருட்களைத் தாராளமாகவும் திருப்திகரமாகவும் வழங்கி வருகின்றது. போக்குவரத்து வீதிகள் இந்த வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மக்களின் போக்குவரத்து பல இடங்களில் தடைப்பட்டிருக்கின்றது.

மன்னார் மாவட்டத்திலும் 6,758 குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இவற்றில் 5,838 குடும்பங்கள் விவசாயக் குடும்பங்களாகும். அங்கு 10,735 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை முற்றுமுழுதாக அழிவடைந்துள்ளது. அதேவேளை, 262 ஏக்கர் மேட்டுப் பயிர்ச்செய்கையும் அந்த மாவட்டத்திலே அழிவுக்குள்ளாகியிருக்கிறது. அத்துடன் அங்குள்ள 92 குளங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. 7 வீதிகள் முற்றுமுழுதாக அழிவுக்குள்ளாகியிருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6,821 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அநேகமாக தற்காலிக வீடுகளாகும். மேலும் 3,563 குடும்பங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. மாவட்டத்திலும் தொடர்ந்து பெய்த மழையால் 1,668 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 1,522 வீடுகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. குறிப்பாக காரைநகர், ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களில் இந்த பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. யாழ். மாவட்டத்தில் மொத்தம் 2,612 குடும்பங்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே சிறு மழை பெய்தால்கூட வெள்ள அனர்த்தம் ஏற்படக்கூடிய காரணிகளை கண்டறிந்து அவற்றைத் தீர்க்க வேண்டும். குறிப்பாக எமது பகுதிகளிலே 30 ஆண்டுகால யுத்தம் எல்லாக் கட்டமைப்புக்களையும் சீர்குலைத்துவிட்டது. ஆகவே, சீராக நீர் வடிந்தோடும் தன்மையை உருவாக்குவதற்கான பொறுப்பை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஏற்று உரிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## மாடு வெட்டிய நபர்கள் கைது

(அச்சுவேலி)

அனுமதிப் பத்திரம் இன்றி மாடு வெட்டிய ஆறு நபர்கள் அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து புத்தூர் விரவாணிப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் அதிகாலை 3.00 மணியளவில் சட்ட விரோதமாக மாடு வெட்டிக் கொண்டிருந்த ஆறு பேரையும் கைது செய்துள்ளனர். (15)

## நிர்வாகத் தெரிவு

யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டி ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் இந்த ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக வீ.ராஜ்குமார், உபதலைவராக மு.தர்மகுலராசா, செயலாளராக செ.யோகநாதன், உப செயலாளராக சி.சிறீதரன், பொருளாளராக பா.ரஞ்சித்குமார் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 4 பேரும், போசகராக மா.சிவசுப்பிரமணிம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தில் மிகிந்தோதய திட்டத்தின் கீழ் 2 மாடிகள் கொண்ட ஆய்வு கூடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருவதைக் காணலாம். (140)

## ஏ - 9 வீதியில் செல்லும் பாதசாரிகள் மஞ்சள் கடவையை பயன்படுத்துவதில்லை

### - பொலிஸார் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ - 9 வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் பாதசாரிகள் மஞ்சள் கடவையை சரியான முறையில் பயன்படுத்துவதில்லை எனவும் இதனால் விபத்துக்களை விலை கொடுத்து வாங்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

ஏ - 9 வீதி போக்குவரத்து பிரதான வீதியாக காணப்படுவதுடன் தென்னிலங்கையிலிருந்தும் யாழ். மாவட்டத்திலிருந்தும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் பேருந்துகள், கனரக வாகனங்கள் என பல வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றன.

இந்நிலையில் இவ்வீதியூடாகச் செல்லும் பாதசாரிகள் மஞ்சள் கடவையூடாக வீதிக்குக் குறுக்காகச் செல்லாமல் பொது வழியூடாக வீதிக்குக் குறுக்காகச் செல்வதால் வாகனங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கள் நிகழ வாய்ப்பு ஏற்படுகிறது.

பாதசாரிகளுக்காகவே மஞ்சள் கடவை போடப்பட்டுள்ள நிலையில் அவர்கள் அதனை மீறி தாம் நினைத்தபடி செயற்படுவதால் பாதிக்கப்படுவது அவர்கள் மட்டுமல்ல, ஏனைய பயணிகளுமே என போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே பொது மக்களுக்கும், ஏனைய பயணிகளுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் பாதசாரிகள் மஞ்சள் கடவையை பயன்படுத்தி வீதியைக் கடக்க வேண்டும் எனவும் இது தொடர்பாக கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் போக்குவரத்துப் பொலிஸார் வேண்டுகோள் விடுக்கின்றனர். (கே)

## மழை வீழ்ச்சி பதிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இருந்து நேற்று முன்தினம் நண்பகல் வரை யாழ்.மாவட்டத்தில் 54.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருப்பதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள வானிலை .அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நேற்று முன்தினம் மட்டும் 18.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருந்த லேசான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாகவே இவ்வாறு கடந்த சில நாட்களாக யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்து வருவதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (பா)

## கவிதை நூல் வெளியீட்டுவிழா

கவிஞர் ஜெ.உமாசுதனின் 'குருகு' என்னும் கவிதை நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## கேப்பாபிலவில் மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த மக்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள 130 குடும்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

அன்றையதினம் காலை 9 மணிக்கு கேப்பாபிலவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மக்களை வருகைதருமாறும், வரும்போது தற்போது வசிக்கும் கிராம அலுவலரின் பதிவு நீக்கற் கடிதத்தில் பிரதேச செயலரின் மேல்கையொப்பத்துடன் கொண்டு வருமாறும் அதன் பின்னரே மீள்குடியேற்ற பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - *மாத்யூஸ்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**

## நல்வாழ்வுக்குத் திறக்க வேண்டிய வாசல்!

பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் தமிழ் மக்களை உணர்ச்சிவயப்படுத்தி, யதார்த்தத்தை மறைத்து அவர்களைப் பொய்களின் மாயையில் ஏமாற்றி வைத்திருக்கும் பணியையே செய்துகொண்டிருக்கின்றன என்ற விமர்சனத்தில் உண்மை உண்டுதான்.

இந்த ஊடகங்கள், உள்ளீடற்ற எதிர்ப்பு அரசியலின் துணைக்கருவிகளாக இயங்குவதும், போலியான கொந்தளிப்புகள் மூலம் நம் சமூகத்தை மேலும் மேலும் பின்னடைய வைத்துக்கொண்டிருப்பதும் சமூக அக்கறையுள்ளவர்களால் கண்டிக்கப்பட வேண்டியதுதான்.

ஆனால், பத்திரிகைகளை எரிப்பதோ, ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதோ, தாக்குதல்களை நடத்துவதோ ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. தவறான கருத்துக்களாகவே இருந்தாலும் அவற்றை வன்முறைகளால் எதிர்கொள்ளும் அநாகரிகம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இங்கு 2009 க்கு முற்பட்ட இரண்டரை தசாப்த காலத்தை அதன் சகல பரிமாணங்களோடும் மீளக்கொண்டுவர விரும்புபவர்களே இத்தகைய வன்செயல்களை அனுமதிப்பதும் ஆதரிப்பதுமான தவறுகளைப் புரிவர். வன்முறையின் குரூரத்தைப் போதுமானளவு அனுபவித்துவிட்டது இந்தச் சமூகம். மீள்வதற்கு உதவுவதே சமூகப் பொறுப்புணர்ந்தவர்களின் கடன்.

நாம் ஜனநாயக வழிமுறைகளுக்கும் மக்களின் அமைதியான செழிப்பான வாழ்வுக்குமே இந்த சூழலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஊடகங்களின் மீது வன்முறையைப் பிரயோகிப்பது எவ்வளவு தவறானதோ, அதேபோல ஊடகங்களிலும் வன்முறையைப் பொங்கவிட்டுக் கொண்டிருப்பதும் தவறானது என்பதை இந்தச் சமயத்திலேனும் நம்மவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஊடகங்களின் மூலம் வன்முறை உணர்வுகளைத் தூண்டிவிடுபவர்கள் மற்றும் ஊடகங்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பவர்கள் இருதரப்பினரையும் நாம் கண்டித்து நிதானப்படுத்த வேண்டும். இன்னும் முழுமையான அமைதிச் சூழல் இங்கு வந்துவிடவில்லை என்று சிலருக்கு அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால், அந்த அமைதிச் சூழலை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கியே நம் செயற்பாடுகள் அனைத்தும் இருக்க வேண்டுமென்பதை நாம் மறுத்துவிடக் கூடாது.

வன்முறையைத் தூண்டிவிடுவதும், அந்த ஆவேசத்தில் அவிந்துபோகத் தயாராயிருப்பவர்களை உருவாக்குவதும் மிக இலகுவான காரியங்களே. ஆனால், சாமானிய வாழ்வைக் காப்பாற்றிக் கொள்வதற்கே அதிக பிரயாசை வேண்டியிருக்கிறது. அதற்காகவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு விவேகமுடன் செயற்பட்டாக வேண்டும்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு சிறுவனிடம் கேட்டதாக ஒரு கதை உண்டு. உனக்கு ஒருவன் அடித்துவிட்டால், பதிலுக்கு அவன் முகத்தில் ஓங்கிக் குத்து விடுவதா அல்லது கைகளிரண்டையும் காற்சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு உன் கோபம் ஆறும்வரை பொறுத்திருக்க முயலுவதா சிரமமானது என்று அவர் கேட்கிறார்.

குத்தி அவன் மூஞ்சையை உடைக்காமல் கைகளைக் காற்சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு பேசாமல் நிற்பது தான் சிரமமானது என்கிறான் சிறுவன்.

ஒருவர் செய்யச் சுலபமானதைச் செய்வதா வீரம் அல்லது சிரமமான விஷயத்தைச் செய்வதா வீரம் என்று சிறுவனைக் கேட்கிறார் ராமகிருஷ்ணர். நீ திருப்பி அடிக்காமல் விடும்போது சண்டை தொடர்வது நிறுத்தப்படுகிறது புரிந்துகொள்கிறாயா? சிறுவனுக்குப் புரிகிறது. நமக்கும் புரிய வேண்டும்.

பகைமறப்பே நல்லிணக்கத்துக்கும் பின்னர் நல்வாழ்வுக்குமான வாசல் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# இந்தியாவில் புலிகள் மீதான தடை

# உறுதிப்படுத்தியது நீதிபதி ஜெயின் குழு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் விதித்த தடை நீடிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்படுகிறது. கடைசியாக 14.5.2012 இல் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டது.

இந்தத் தடை நீடிப்பு சரியானதா இல்லையா என்பது குறித்து நீதிபதி வி.கே. ஜெயின் தலைமையிலான சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு விசாரணை நடத்தியது.

இந்தத் தீர்ப்பாயத்தின் விசாரணை சென்னை, ஊட்டி, டில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. உள்ளிட்டோர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீட்டிப்புக்கு எதிராக வாதிட்டனர்.

இந்தநிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையை நீதிபதி எம்.கே. ஜெயின் தலைமையிலான குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இது குறித்த உத்தரவு தமிழக அரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாடு திரும்புவதற்கு முயற்சி

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாடு திரும்ப முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரிசையில் நின்று முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. எனினும், எஞ்சியுள்ள சொற்ப வெளிநாட்டு முதலீட்டாளர்களும் திரும்பிச் செல்கின்றனர்.

சட்டம் ஒழுங்கு இல்லாத நாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் ஒருபோதும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய மாட்டார்கள். நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்களிலேயே ஈ.எப்.எப். பிரிவின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்ளப்படும். அரசாங்கம் இந்தக் கடனுக்காக விண்ணப்பம் செய்துள்ளது.

பொருளாதாரத்தை மீளமைக்கும் நிபந்தனையுடனேயே சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய பிரதம நீதியரசரை ஏற்றுக்கொள்ள வேண்டாம்

## சிரேஷ்ட சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசர் ஒருவரை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என சிரேஷ்ட சட்டத்தரணிகள், உச்ச நீதிமன்ற நீதியரசர்களிடம் கோரியுள்ளனர்.

பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டு புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டால் அந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என கோரியுள்ளனர்.

புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டால் அது நீதிமன்றக் கட்டமைப்பை அவமரியாதை செய்யும் வகையில் அமையும் எனத் தெரிவித்துள்ளனர்.

உச்ச மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் ஏற்கனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை இரத்துச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரிசானாவின் உடலை ஒப்படைக்குமாறு உறவினர்கள் கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் உடலை தங்களிடம் ஒப்படைக்குமாறு ரிசானாவின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ரிசானாவின் மரணச் செய்தியைக் கேட்ட குடும்பத்தினர் அதிர்ச்சியில் உள்ளதாகவும் அவரது உடலை இலங்கைக்கு எடுத்துவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கோரியுள்ளதாகவும் ரிசானாவின் உறவினர் அப்துல் ஜிஹாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பெண் ரிசானா நபீக்கின் உடலை இலங்கைக்குக் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படுவதாக சவுதிக்கான இலங்கைத் தூதர் அகமது ஜாவேத் தெரிவித்தார்.

அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இலங்கைத் தூதரகத்துக்கு எந்தவிதமான தகவலும் இல்லை என்றும், ஊடகங்கள் மூலமே தாங்களும் அறிந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரிசானாவின் உடலை இலங்கைத் தூதரகத்திடம் தருமாறு சவுதி அதிகாரிகளிடம் முன்னுதாரணமற்ற வகையில் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதா அவர் கூறுகிறார்.

அதே நேரம் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டுவிட்டதா என்பதும் தமக்குத் தெரியாது எனவும் அவர் கூறுகிறார். அவரைக் காப்பாற்ற இலங்கை அரசும் தூதரகமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார். இது அடிப்படையற்றது. சவுதி நடைமுறை குறித்த புரிதல் இல்லாமல் கூறப்படுகிறது என்றார் இலங்கைத் தூதர்.

சவுதியில் இப்படியான வழக்குகள் வரும் போது அரச தரப்பு வழக்கறிஞர்களும் பொலிஸாரும் முன்வைக்கும் ஆதாரங்களை நீதிபதி ஆராய்வார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் வாதாட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஷரியா சட்டத்தின்படி மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரம் அரசருக்குக் கிடையாது என்றாலும் நல்லிணக்கப்பாட்டை கொண்டுவரக் கூடிய அதிகாரம் இருப்பதால் அதைச் செய்ய அரச குடும்பத்தினர் மூலம் முயற்சி எடுக்கப்பட்டதாகவும் தூதர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்திக்க இலங்கையில் இருந்து வந்த மூன்று தூதுக் குழுக்கள் முயன்ற போதிலும், அக்குடும்பத்தினர் தம்முடன் பேச மறுத்துவிட்டனர் எனவும் அகமது ஜாவேத் கூறுகிறார்.

ரிசானா நபீக்குக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து சவுதிக்கான இலங்கைத் தூதர் திரும்ப அழைக்கப்படுவதாக வந்த செய்திகளை மறுத்து அகமது ஜாவித் தனது மூன்று ஆண்டுகால பணிக் காலம் டிசம்பர் 9 ஆம் திகதியே முடிந்து விட்டதால் இது வழக்கமான ஒரு மாற்றல் எனவும் கூறுகிறார்.



பொதுவில் கடல் நீரானது சுமார் 3.5 சதவிகித அளவுக்கு உப்பு அடங்கியது. ஆனால் மேற்படி பாதாள ஏரியின் நீர் 20 சதவிகித அளவுக்கு உப்பு அடங்கியது. இப்படியான பாதகமான சூழ்நிலைகளில் அந்த பாதாள ஏரியில் நுண்ணுயிர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது வியப்பளிப்பதாகும்.

# அண்டார்டிகாவில் பாதாள ஏரியில் நுண்ணுயிர்கள்

**என். ராமதுரை**

அண்டார்டிகா தென் துருவத்தில் அமைந்த பெரிய கண்டம். எங்கு பார்த்தாலும் கெட்டியான உறை பனி. இந்த உறை பனி காரணமாக எங்கு பார்த்தாலும் வெண்மை. செடி கொடி கிடையாது. ஆங்காங்குள்ள ஆராய்ச்சிக் குழுவினர் தவிர, வேறு யாரும் அங்கு நிரந்தரமாக வசிப்பது கிடையாது.

அண்டார்டிகா பல நூறு மீற்றர் ஆழத்துக்கு உறைபனியால் மூடப்பட்டிருந்தாலும் கெட்டியான உறை பனிக் கட்டிக்கு அடியில் பல ஏரிகள் உள்ளன என்பது ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட விஷயம் மொத்தம் 387 பாதாள ஏரிகள் உள்ளன.

சில ஏரிகள் மிக ஆழத்தில் உள்ளன. லேக் வோஸ்டாக், லேக் எல்ஸ்வர்த் ஆகிய பாதாள ஏரிகள் இப்படிப்பட்டவை. லேக் வில்லான்ஸ் என்னும் ஏரியும் ஓரளவு ஆழத்தில் உள்ளதே. ஆனால் லேக் விடா எனப்படும் ஏரி மிகக் குறைந்த ஆழத்தில் உள்ளதாகும். ஆகவே வழக்கமான முறையில் தரையில் துறப்பணமிட்டு அந்த பாதாள ஏரியின் நீரை எடுப்பதில் பெரிய பிரச்சினை இருக்கவில்லை

லேக் விடா பகுதியில் 60 அடி ஆழத்துக்கு அடியில் ஏரி உள்ளது. அந்த பாதாள ஏரியில் உள்ள தண்ணீரானது மைனஸ் 13 பாகை அளவுக்குக் கடும் குளிர்ச்சியானது. பாதாள ஏரி என்பதால் சுத்தமாக வெளிச்சம் கிடையாது. கும்மிருட்டு.. அத்துடன் ஏரி நீர் கடும் உப்புக் கரிப்பதாகும்.

பொதுவில் கடல் நீரானது சுமார் 3.5 சதவிகித அளவுக்கு உப்பு அடங்கியது. ஆனால் மேற்படி பாதாள ஏரியின் நீர் 20 சதவிகித அளவுக்கு உப்பு அடங்கியது. இப்படியான பாதகமான சூழ்நிலைகளில் அந்த பாதாள ஏரியில் நுண்ணுயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது வியப்பளிப்பதாகும்.

அமெரிக்காவில் நெவாடாவில் உள்ள பாலைவன ஆராய்ச்சிக் கழகத்தின் நிபுணர்கள் இந்த கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர்.

இந்த ஏரியானது 2800 ஆண்டுகளுக்கு முன்னர் ஐஸ்கட்டிக்கு அடியில் புதையுண்டு போயிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்த பாதாள ஏரியில் 32 வகையான நுண்ணுயிர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்சிசன் கிடையாது. சூரிய ஒளியும் கிடையாது. ஆனாலும் பாதாள ஏரியில் உள்ள நுண்ணுயிர்கள் ஐதரசனைப் பயன்படுத்தி உயிர் வாழ்கின்றன என்று கருதப்படுகிறது. வழக்கமான முறைகளுக்குப் பதில் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைகளில் நுண்ணுயிர்கள் உயிர் வாழ்வது என்பது பூமியில் புதிது அல்ல.

கடல்களில் சில இடங்களில் நல்ல. ஆழத்தில் Black Smokers எனப்படும் கூம்பு வடிவ வெந்நீர் ஊற்று உள்ள இடங்களில் பல நூறு பாகை செல்சியஸ் வெப்பத்தில் சூடான நீர் வெளிப்படுகிறது. அவற்றின் அருகே அதாவது கடும் வெப்பம் நிலவும் சூழலில் நுண்ணுயிர்கள் காணப்படுகின்றன.

இதற்கு நேர்மாறான குளிர் சூழ்நிலையில் லேக் விடா பகுதியில் நுண்ணுயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது சனி, வியாழன் போன்ற கிரகங்களின் சந்திரன்களில் கிட்டத்தட்ட இம்மாதிரியான சூழ்நிலைகளில் நுண்ணுயிர்கள் ஒரு வேளை இருக்கலாம் என்பதைக் காட்டுவதாகச் சொல்லலாம்.

இதற்கிடையே அண்டார்டிகாவில் சுமார் மூன்றரை கிலோ மீற்றர் ஆழத்தில் பல இலட்சம் ஆண்டுகளாகப் புதையுண்டு கிடக்கும் எல்ஸ்வர்த் ஏரியின் நீரை எடுத்து ஆராய பிரிட்டிஷ் ஆராய்ச்சிக் குழுவினர் இறுதிக் கட்ட நடவடிக்கைகள் 2012 டிசம்பர் மாத மத்தியில் மேற்கொண்டனர். டிசம்பர் மாதம் என்பது அண்டார்டிகா பகுதியில் 'கோடைக்காலம்' ஆகும். ஆனாலும் குளிர் நிலைமை மைனஸ் 30 பாகை செல்சியஸ் அளவுக்கு இருக்கும்.

குழாய் மூலம் மிகுந்த வேகத்தில் வெந்நீரைப் பீச்சி உறைபனிக்கட்டியில் துளையிட்டு பாதாள ஏரியிலிருந்து தண்ணீர் சாம்பிளை எடுப்பது என்பது திட்டமாகும். 90 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பம் கொண்ட வெந்நீரைத் தொடரந்து தயாரிக்கின்ற இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் பிரிட்டிஷ் திட்டம் டிசம்பர் மாதக் கடைசியில் பாதியில் நின்று விட்டது. மீண்டும் இங்கு முயற்சி மேற்கொள்ள சில ஆண்டுகள் ஆகலாம் என்று கருதப்படுகிறது

எனினும் ரஷ்ய நிபுணர்கள் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் அண்டார்டிகாவில் லேக் வோஸ்டாக் என்னும் பாதாள ஏரியிலிருந்து நீரை எடுத்து ஆராய்வதில் வெற்றி கண்டனர். லேக் வோஸ்டாக் அண்டார்டிகாவில் உள்ள பாதாள ஏரிகளிலேயே மிகப் பெரியது. மேற்பரப்பிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் ஆழத்தில் அமைந்த அந்த ஏரியின் நீளம் சுமார் 250 கிலோ மீற்றர். அகலம் சுமார் 50 கிலோ மீற்றர்.

ரஷ்யர்கள் வெந்நீரைப் பயன்படுத்தும் உத்தியைக் கையாளவில்லை. பனிக்கட்டித் தரையில் வழக்கமான முறையில் துறப்பணமிடும் உத்தியைக் கையாண்டனர். ஆனால் அவர்கள் 20 ஆண்டு காலம் பாடுபட வேண்டியிருந்தது. எது எப்படியோ லேக் வோஸ்டாக் நீரை வெளியே எடுப்பதில் ரஷ்யர்கள் நிகழ்த்திய சாதனை மகத்தானதே.

லேக் வோஸ்டாக் ஏரியிலிருந்து எடுக்கப்பட்ட நீர் மிக சுத்தமாக இருப்பதாகத் தெரியவந்தது. அந்த நீரில் நுண்ணுயிர்கள் எதுவும் இல்லை என்பதாகப் பூர்வாங்கத் தகவல்கள் காட்டின.

இதற்கிடையே அமெரிக்க நிபுணர்கள் லேக் வில்லான்ஸ் என்னும் பாதாள ஏரியிலிருந்து நீர் சாம்பிள்களை எடுப்பதில் மும்முரம் காட்டி வருகின்றனர். இந்த பாதாள ஏரியானது சுமார் ஒரு கிலோ மீற்றர் ஆழத்தில் அமைந்துள்ளது. இந்த பாதாள ஏரியுடன் பாதாள ஆறுகளும் இணைந்துள்ளன. அந்த வகையில் அது அலாதியானது.

லேக் வில்லான்ஸ் பாதாள ஏரியை எட்டுவதற்கு அமெரிக்க நிபுணர்கள், பிரிட்டிஷ் நிபுணர்கள் கையாண்டது போலவே வெந்நீரைப் பயன்படுத்த இருக்கின்றனர். வெற்றி பெறுவரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

**மைனஸ் 13 பாகை செல்சியஸ் அளவுக்குக் கடும் குளிர்ச்சியான சூழ்நிலையில் லேக் விடா பகுதியில் நுண்ணுயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது சனி, வியாழன் போன்ற கிரகங்களின் சந்திரன்களில் கிட்டத்தட்ட இம்மாதிரியான சூழ்நிலைகளில் நுண்ணுயிர்கள் ஒரு வேளை இருக்கலாம் என்பதைக் காட்டுவதாகச் சொல்லலாம்.**

# புலி ஆதரவாளர்களுடன் மங்கள சமரவீர நாட்டுக்கு எதிராக சதித்திட்டம்

## சிங்கள நாளேடு தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலி ஆதர வாளர்களுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சதித் திட்டம் தீட்டி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான சிங்களப் பத்திரிகையொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

தற்போது பிரிட்டனில் தங்கியிருக்கும் மங்கள சமரவீர, புலி ஆதரவாளர்களை இரகசியமாக சந்தித்து வருகின்றார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டை சீர்குலைக்க புலி ஆதரவு அமைப்புக்கள் முயற்சிக்கின்றன.

பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளிடம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என புலி ஆதரவாளர்கள் கோரி வருகின்றனர்.

உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரனுடன் மங்கள சமரவீர இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் சில புலம்பெயர் செய்தி இணையங்களில் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேராதனையில் வீதி கீழிறங்கியது மலையகத்தில் மண்சரிவு அபாயம்

(கண்டி)

கண்டி - பேராதனை வீதியில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் சுமார் 10 அடி ஆழத்திற்கு வீதி கீழிறங்கியுள்ளதுடன், சுமார் 10 அடி தூரத்திற்கு மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை,மலையகத்தில் மண்சரிவு அபாயம் இருப்பதாக தேசிய கட்டட மற்றும் ஆராய்ச்சி அமைப்பு எதிர்வு கூறியுள்ளது.

பேராதனை பிரதான வீதி கீழிறங்கியமையினால் அந்த வீதியினூடாக வாகனங்களில் செல்வதை குறைத்துக்கொள்ளுமாறும் அந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

சீரற்ற காலநிலையினால் மலையகத்தில் குறிப்பாக கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு, பாரிய கற்கள் சரிந்து விழுதல், மண்திட்டு சரிந்து விழுதல் போன்ற அபாயங்கள் ஏற்படு வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

# சட்டத்துறை அரசியல் மயம்; அமைச்சர் கெஹலிய கவலை



சட்டத்துறையை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிடம் பணிவாக வேண்டுவதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்ற முதலாம் குழு அறையில் நடைபெற்றபோது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்;

இன்று சட்டத்துறை அரசியல் மயமாக்கப்பட்டுவருகின்றமை நன்கு அவதானிக்க முடிகின்றது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைக்கு வரும்போது பிரதம நீதியரசர் ஒரு அரசியல்வாதி போலவே நடந்துகொண்டார்.

கௌரவமாக மதிக்கப்படவேண்டிய உயர் நீதிமன்ற வளாகம் தேங்காய் உடைக்கும் தளமாகவும் பிரித் நூல் கட்டும் இடமாகவும் மாற்றமடைந்தது. நீதிமன்ற சரித்திரத்தில் இவ்வாறான நிகழ்வுகள் இதற்கு முன்னர் ஒருபோதும் நடைபெறவில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை சட்ட விதிகளுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விவாதம் இப்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக்கொணடிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் இருக்கின்றது. இப்பிரச்சினைக்கு நல்லதொரு முடிவு நிச்சமாகக் கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

# அதிகாரிகளை பணிநீக்கும் அதிகாரம் நீதியரசரே ஜனாதிபதிக்கு வழங்கினார்

## நிமால் சிறிபால டி சில்வா



உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகளை பணி நீக்கம் செய்யும் அதிகாரத்தை பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கியதாக அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவொன்றின் தலைவர் அல்லது உறுப்பினரை தேவைக்கு ஏற்ப பணி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதாவது பிரதம நீதியரசரை பதவி விலக்குவதற்கு அவரே, ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்கினார்.

18ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான சட்ட வரைவிலக்கணத்தின்போது இந்த அதிகாரத்தை பிரதம நீதியரசர் வழங்கியுள்ளதாக அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# ரிசானாவின் வீடு புனர்நிர்மாணம் வேலைவாய்ப்பு பணியகம் உறுதி




(கொழும்பு)

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் வீடு புனர்நிர்மாணம் செய்துகொடுக்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ரிசானாவின் சொந்த ஊரான மூதூரில் பள்ளிவாசலொன்றும் கட்டிக்கொடுக்கப்படும் எனவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல்சேனா லங்காதிகார நேற்று முன்தினம் ரிசானாவின் வீட்டுக்கு விஜயம் செய்தார்.

ரிசானாவின் குடும்பத்திற்கு தேவையான நிதியுதவிகளை வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அதிகாரிகள் மேற்கொள்வர் என அவர் கூறினார்.

தற்போதும் கூட ரிசானாவின் குடும்பம் வருத்தப்படுகின்றது என தெரிவித்த வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர், தனது மகளின் சடலத்தை தருமாறு ரிசானாவின் தாய் மீண்டும் கேட்டதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, ரிசானா நபீக்கின் குடும்பத்தினர் வசிப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட வீடொன்றை அமைத்துக் கொடுபதற்கு சவூதி அரேபியா தனவந்தரொருவர் முன்வந்துள்ளதாக பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ரிசானா நபீக்கின் குடும்ப வறுமை நிலையை கருத்திற்கொண்டு எந்தநோக்கத்திற்காக அவர் சவூதி அரேபியாவுக்கு சென்றாரோ அது நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

# சிறையில் இருந்து தப்பிய 10 கைதிகளில் மூவர் கைது

அவிசாவளை விளக்கமறியல் சிறையில் இருந்து தப்பிச் சென்ற 10 கைதிகளில் மூவர் கொஸ்கம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு கொஸ்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்கம - புவக்பிட்டிய பகுதியில் ஒருவரும், கொஸ்கம - அஸ்வத்த வடக்கு பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கடுவல - வலச்சிவத்த - ரனால பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

அவிசாவளை விளக்கமறியல் சிறைச்சாலை இருந்து 10 கைதிகள் பாதுகாப்பு அதிகாரிகள் மூவரை தாக்கிவிட்டு நேற்று முன்தினம் அதிகாலை தப்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் வெள்ளம்; ஒருவரின் சடலம் மீட்பு

பதுளை மாவட்டத்தில் இருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பதுளையில் தொடர்ச்சியாக அடை மழை பெய்துவருகின்றது. இந்நிலையில் பதுளை நகரை அண்டிய ஜினாநந்தகம, அந்தனிய, சுமண திஸ்ஸகம உள்ளிட்ட பதுளுஓயாவை அண்டிய கிராமங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பதுளை, அந்தனிய பிரதேசத்தினூடாக பதுளுஓயாவை கடக்க முற்பட்டபோது ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு வெள்ளத்தில் அடிதது்செல்லப்பட்டதாகவும் இவரது சடலம் நேற்று காலை மீட்கப்பட்டதாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

65 வயதான பி.எம்.டிங்கிரிபண்டா என்பவரே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவர். இதேவேளை, மற்றையவர் பசறை, கமயவெல வலாத்தொட பாலத்தைக் கடக்க முற்பட்டபோது நேற்றுமுன்தினம் இரவு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இவரை தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் பசறை பொலிஸார் கூறினர். 52 வயதான எஸ்.எம்.பியரத் என்பவரே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார்.

# அமைச்சுப் பதவிகளுக்காக கொள்கைகள் தாரை வார்ப்பு

## அமைச்சர் வாசுமீது சுமந்திரன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளுக்காக வாசுதேவ நாணயக்கார கொள்கைகளை தாரைவார்த்து விட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்கார தனது சிறு பராய ஹீரோக்களில் ஒருவர் எனவும், வாசுதேவவை நாடாளுமன்றில் சந்தித்தமை பெருமையளிப்பதாகவும் வீட்டு உறவினர்களிடம் கூறி பெருமிதம அடைந்துண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது அந்த நடவடிக்கைகளுக்காக வெட்கமடைவதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார். வாசுதேவ நாணயக்காரவின் சில வழக்குகளில் தன்னார்வ அடிப்படையில் சுமந்திரன் ஆஜராகியதாகவும் இந்த நடவடிக்கைகள் வருத்தமளிப்பதாகவும் சுமந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.



மந்திகை ஆதார வைத்தியசாலையில் நிலவும் இரத்தத்திற்கான பற்றாக்குறையை நிறைவு செய்யும் வகையில் நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் இரத்த தானம் செய்வதைக் காணலாம். (18)

# யாழ். மாவட்டத்தில் 1123 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்கின்றனர்

## – செயலக புள்ளி விபரத் தகவல்கள் –

யாழ்.மாவட்டத்தில் சிறுவர் இல்லங்களில் வாழுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டை விட 2012 ஆம் ஆண்டு குறைவடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி யாழ்.மாவட்டத்தில 15 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளடங்கலாக 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதி வரை 1483 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்வதாக இனங் காணப்பட்டுள்ள நிலையில் இவ் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டு 1123 ஆக குறைவடைந்துள்ளதாக அத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 133 சிறுவர்களும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 55 சிறுவர்களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 364 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 100 சிறுவர்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 54 சிறுவர்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 21 சிறுவர்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 136 சிறுவர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 147 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 56 சிறுவர்களும், சிறுவர் இல்லங்களில் வாழ்ந்துவருவதாக இனங்காணப்பட்டுள்ளது.

மேலும் கரவெட்டி, பிரதேச செயலர் பிரிவில் 57 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருவதாகவும் இதில் நெடுந்தீவு, வேலணை, காரைநகர், பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் எந்தவொரு சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் இல்லை எனவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அதிகளவு சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருவது இணங் காணப்பட்டுள்ளதாகவும் புள்ளி விபரத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# மீன்களின் விலை வீழ்ச்சி

யாழில் கடந்த இரு நாட்களாக வீசிய காற்றுடன் கூடிய மழையின் காரணமாக மீனவர்களால் பெருமளவு மீன்கள் பிடிக்கப்பட்டு இருக்கின்றன.

தீவுப் பகுதிகளிலிருந்து வாகனங்கள் மூலம் பெருமளவு மீன்கள் கொண்டு வரப்பட்டமையினால், யாழ்ப்பாணத்தின் முக்கிய மீன் சந்தைகளான கொட்டடி, சின்னக்கடை, நாவாந்துறை, காக்கைதீவு போன்ற சந்தைகளில் மீன்கள் மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கிலோ ஒட்டி, ஓரா மீன்கள் ரூபா 80 இற்கும், விளமீன் கிலோ ரூபா 150 இற்கும் விற்கப்பட்டு வருகின்றது.

# நஷ்டஈடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த யுத்த அனர்த்தத்தின் போது அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட 59 பேருக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதில் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய் ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்த்து 59 பேருக்கு வழங்கப்படவுள்ளதுடன் இதில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்து கொள்ளவுள்ளார். (04)

# முரசின் இன்றைய பலன்

(12.01.2013 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 28 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தராடம் முன்னிரவு 11.04 வரை. திதி துதியை முன்னிரவு 10.35 வரை. இராகுகாலம் 9.33 - 11.03 வரை. சுபநேரம் 3.33 - 5.03 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதார்த்த குணங்களுடன் செயல்படுவீர்கள். பிறர் மனம் அறிந்து பேசுவதால், சிரமம் தவிர்ப்பீர்கள். தொழில் நிலைமை சீராகும். |
| ரிஷபம் | புகழ்பெற வாய்ப்பு. செயல்களில் சுறுசுறுப்பு. கூடுதல் உழைப்பால் வளர்ச்சி. பணவரவில் முன்னேற்றம். குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| மிதுனம் | எதிர்கால நலன் பற்றிய அக்கறை. தொழில் குறுக்கீடுகள் வரும். விவேகம் கைகொடுக்கும். அளவான பணவரவு. சேமிப்பு பயன்படும். |
| கடகம் | சிலர் உங்கள் மனம் வருந்த செயல்படுவர். பரிவுடன் மறப்பீர்கள். எதிர்பார்ப்புகளை, குறைப்பீர்கள். தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. |
| சிம்மம் | நிதானம், வசீகரத்துடன் பிறர் மனம் கவருவீர்கள். தொழில், இலக்கு நிறைவேறும். சராசரி பணவரவு. குடும்பத்தினர் விரும்பியது செய்வீர்கள். |
| கன்னி | திட்டமிட்ட பணிகளில், மாற்றம் நேரிடும். புதிய நட்பு உருவாகும். தொழில், இடையூறு களைவீர்கள். செலவு கூடும். வாகன பயணத்தில் கவனம். |
| துலாம் | மனதில் மகிழ்ச்சி நிறையும். இயன்ற அளவு பிறருக்கு உதவுவீர்கள். தொழில், சிறக்கும். தாராள வரவு. விருந்து உபசரிப்பு. விரும்பியது செய்வீர்கள். |
| விருச்சிகம் | உங்கள் புத்திசாலித்தனம் பாராட்டப்படும். நண்பர், உறவினர் நன்மதிப்பு. தொழில், செழிக்கும். புதிய செலவுகள் வரும். சுற்றுலா திட்டம். |
| தனுசு | மனதில் இனம் புரியாத சஞ்சலம். எதிரானவர்களிடம் விலகி, சிரமம் தவிர்க்கலாம். வேலைச்சுமை. பணவரவு ஓரளவு. உறவினர் நண்பர் ஆதரவு. |
| மகரம் | முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். திட்டமிட்டவை நிறைவேறும். தொழில் போட்டி, சச்சரவு விலகும். உபரி வருமானம். கடன் தீரும். |
| கும்பம் | போட்டி, பந்தய நிலைமை இருக்கும். தைரியம் வெற்றி தரும். தொழில், அபிவிருத்தி. உபரி வருமானம். வீட்டுப் பொருட்கள் சேர்ப்பீர்கள். |
| மீனம் | செயல்களில் ஆரவாரத் தன்மை இராது. உறவினர் ஆலோசனை உதவும். தொழில், மாற்றம் சரி செய்வீர்கள். பணவரவு தாமதம். |

# கனகபுரம் செல்லும் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கனகபுரம் செல்லும் வீதி முறையாகத் திருத்தப்படவில்லையென பொது மக்களால் குற்றம் சாட்டப்படுகிறது. வீதி நிர்மாணத் திணைக்களத்தின் பராமரிப்பிலுள்ள இவ்வீதியை திருத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் சீராக மேற்கொள்ளப்படவில்லை.

கிரவல் போடாமல் மண் போடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதால் மழை காலத்தில் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது.

கனரக பொதுப் போக்குவரத்து வாகனங்கள் நிறைய இவ்வீதியால் செல்லும் நிலையில் தரமான முறையில் வீதி திருத்தப்பட வேண்டியதன் அவசியம் பலமுறை எடுத்துரைக்கப்பட்டும் சரியாக மேற்கொள்ளப்படவில்லையெனக் மக்கள் தெரிவிக்கின்றனர். (90)

# மழையைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசை

(புத்தூர்)

அன்மைக் காலமாக பெய்து வரும் மழை காரணமாக கூலி வேலைக்கு செல்வோர் தொழில் எதுவும் இன்றி வீடுகளில் முடங்கிக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சாட்டாக பயன்படுத்தியும் வறுமையின் நிலை காரணமாகவும் சில திருட்டுச்சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன.

கடந்த செவ்வாய்கிழமை பட்டப்பகலில் ஆட்டை திருடிய சம்பவம் ஒன்று புத்தூர் கலைமதிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. முருகன் தெய்வேந்திரம் என்பவருடைய ஆடே இவ்வாறு பகல் நேரத்தில் களவாடப்பட்டுள்ளது.

மழை பெய்து கொண்டு இருக்கும் நேரம் வளவிற்குள் நுழைந்த திருடன் வீட்டார் கதவைப் பூட்டி உள்ளே இருக்கும் தருணம் பார்த்து ஆட்டினை களவாடியுள்ளான். பின் மழைவிட்டதும் வெளியே வந்து பார்த்த உரிமையாளர் ஆட்டினை காணாது திகைத்துப் போனார்.

எங்கு தேடியும் ஆட்டைக் காணாத உரிமையாளர் திருட்டுபபோனதை பின்னர் அறிந்து கொண்டார். இதனை அடுத்து பொலிஸாருக்கு கொடுத்த முறைப்பாட்டினை தொடர்ந்து அச்சுவேலி பொலிஸார் திருடனைக் கைது செய்துள்ளதுடன் விற்பனைக்கு தயாராய் இருந்த ஆட்டினையும் மீட்டுக் கொடுத்துள்ளனர். மேலும் குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (15)

# வாவெட்டிக்குளம் உடைப்பு; 80 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(முல்லைத்தீவு)

தொடர்ச்சியாக 3 நாட்கள் பெய்த அடை மழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு கிராமத்திலுள்ள வாவெட்டிக்குளம் உடைப்பெடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை இக்குளம் உடைப்பெடுத்ததை அடுத்து வெள்ளநீர் நந்திக் கடலை நோக்கி மேவிப் பாய்வதாகவும், இதனால் இக்குளத்தை அண்டி காலபோக நெற்செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட நிலையில், முற்று முழுதாக நெற்செய்கை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 80 ஏக்கர் நிலப்பரப்பு காலபோக நெற்செய்கை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதனால் 30 விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்ககப்படுகிறது. (04)

# முள்ளுக்கம்பி வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை முட்கம்பிகள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு அன்றைய தினம் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து சிரமதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இதில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்து கொள்ளவுள்ளார். (04)

# ஹியூஸ் சதம்

## ஆஸி. அபார வெற்றி





(மெல்போர்ன்)


ஹியூஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 107 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலாவது போட்டி நேற்று மேல்போர்னில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறியது. 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து சற்றுத் தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜோர்ச் பெய்லி, ஹியூஸ் இணை இலங்கை பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்தனர். 140 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பான முறையில் ஆடிய ஹியூஸ் சதமடித்தார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹியூஸ் 129 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஜோர்ச் பெய்லி எட்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 89 ஓட்டங்களையும், டேவிற் ஹசி ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மலிங்க, குலசேகர, மத்தியூஸ், ஜீவன் மொண்டிஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 306 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி, முதலிரு விக்கெட்டுக்களையும் 17 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான், சண்டிமல் இணை நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்த ஜோடி 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், துரதிஷ்ரவசமாக டில்சான் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஒரு முனையில் சண்டிமல் சிறப்பாக ஆடியபோதும், மறுமுனையில் விக்கெட்டுக்கள் சரிந்தவண்ணமிருந்தது. இறுதியில் இலங்கை அணி 40 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சண்டிமல் 73, டில்சான் 51, ஜீவன் மொண்டிஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மத்தியூஸ், திரிமன்ன ஆகியோர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் மைக்கி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஹியூஸ்தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

## காலிறுதியில் சாய்னா



(சியோல்)

கொரியா ஓபன் பிரிமியர் சூப்பர் சீரீஸ் பட்மின்ரன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட இந்தியாவின் சாய்னா நெஹ்வால் தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் இந்தோனேசியாவின் மின்ஷியானுடன் நேற்று முன்தினம் மோதிய சாய்னா 21-16, 21-9 என்ற நேர் செட்களில் வென்றார்.

## மாற்றங்களை ஏற்படுத்த ஐ.சி.சி. ஆராய்வு

(டுபாய்)

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இது மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய நடைமுறையின் படி ஒரு தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போட்டியை நடாத்தும் நாடு மாத்திரம் விரும்பினால் போதுமானது என நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நடைமுறையின் படி தொடரொன்றில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் போட்டியில் பங்குபற்றும் இரண்டு நாடுகளும் சம்மதம் தெரிவிக்க வேண்டுமென்ற நிலை காணப்படுகின்றது.

இந்த நடைமுறை தொடர்பாக வாக்களிப்பு நடாத்தப்படவுள்ளது எனவும், 10 முழுமையான அங்கத்துவம் உள்ள நாடுகளும், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவர், உப தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோரின் வாக்குகள் கருத்திற் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறை தொடர்பாக 10 முழுமையான அங்கத்துவ நாடுகளில் இந்தியா தவிர அனைத்து நாடுகளும் முழுமையான விருப்பத்தை வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சியாக நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் இந்தியா இந்த நடைமுறைக்குத் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா ஐ. சி. சி. யினால் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ள நடைமுறைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## துடுப்பாடுகிறது தென்னாபிரிக்கா



(பேர்த் எலிசபெத்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாடுகின்றது.

நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி நேற்று பேர்த் எலிசபெத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிவரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் மதிய போசன இடைவெளிக்காக நிறுத்தப்பட்ட வேளை, ஒரு விக்கெட்டை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஸ்மித் 40 ஓட்டங்களுடனும், அம்லா 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். பந்து வீச்சில் பூவிட்வெல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் வெற்றிபெற்று முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




## ருவென்ரி–20இல் டோனி தலைமையைத் துறக்க வேண்டும்

(பெங்களூர்)

இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ருவென்ரி-20 போட்டி கப்டன் பதவியிலிருந்து டோனி விலகவேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியின் கப்டன் பதவியில் நீடிக்க தகுதி உடையவர் டோனி. அவர் கப்டன் பொறுப்பில் திறம்பட செயற்பட்டு வருகிறார். அதேநேரத்தில் எல்லா நேரத்திலும் எல்லா வடிவிலான போட்டிக்கும் அவர் கப்டன் பொறுப்பில் தொடருவது என்பது முடியாத காரியம். மற்றவர்களின் உதவியை அவர் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

அவர் ருவென்ரி- 20 கிரிக்கெட் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஆகியவற்றின் கப்டன் பதவியை துறந்தால் மேலும் சிறப்பாக செயற்பட முடியும். கப்டன் மற்றும் கீப்பிங் பணியில் அவருக்கு இடைவெளி தேவையானதாகும். ருவென்ரி-20 போட்டி கப்டன் பதவியை அவர் விராட் ஹோலி போன்ற வீரர்களுக்கு கொடுத்தால் அவருக்கு நல்ல ஓய்வு கிடைக்கும். அவர்களும் ஒரு நாள், டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை ஏற்கும் பங்கும் இதன் மூலம் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



சுண்டுக்குளி கிறின் பீல்ட் கராத்தே நிலையத்தில் பயிற்சி பெற்று, மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய மட்ட கராத்தே போட்டிகளில் பதக்கம் வென்றோர் அண்மையில் கிறின் பீல்ட் நிலைய நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். சென்சே பொஸ்கோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கராத்தே சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினர் சென்சே மோகன், கிறின் பீல்ட் கராத்தே நிலையத்தின் உப தலைவர் சைலேந்திரகுமார், பிரதம கராத்தே ஆசிரியர் விஜயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய கராத்தே வீர,வீராங்கனைகளுக்கு விருது வழங்கி கௌரவித்தனர். (எஸ்.பி.)

# கோப்பாயில் இன்று மாகாண மட்ட, கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு வடமாகாண அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் இன்றும் நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

பங்குபற்றுகின்ற அணிகளை இன்று காலை 8.30 மணிக்கு முன்பாக வருகை தந்து பதிவினை உறுதிப்படுத்துமாறு வடமாகாண கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றியீட்டும் [illegible]ள் கொழும்பில் இடம்பெறும் தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது காட்சிப் போட்டிகளில் மோதவுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (93)

# சென். நீக்கிலஸ் மைதானம் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்தின் கால்பந்தாட்ட மைதானம், புலம்பெயர் அன்பர் ஒருவரின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு மீளவும் நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இவ் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்காக எஸ். செல்வகுமார் என்ற அவ்வூரைச் சேர்ந்த புலம்பெயர்ந்த நபர் 2 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியிருந்ததுடன் அம் மைதானத்தையும் அவரே திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் நாவாந்துறை நீக்கிலஸ் பங்குத்தந்தை இராஜசிங்கம், வழக்கறிஞர் றெமிடியஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கரப்பந்தில் புத்தூர் சோமஸ்கந்தா சம்பியன்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பலம் மிக்க அணிகளான புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய அணி எதிர்கொண்டது.


இரு பாடசாலைகளுமே கரப்பந்தாட்டத்தில் வலுவான அணி என்பதால் இப்போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதுபோன்று முதல் செட்டை நடராசா இராமலிங்க வித்தியாலயம் 26-24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டை சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 28-26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சமப்படுத்தியது.

மூன்றாவது செட்டை நடராசா இராமலிங்கம் வித்தியாலய அணி கைப்பற்றி மீண்டும் முன்னிலை பெற்றது. இந்நிலையில் நான்காவது செட்டையும் நடராசா இராமலிங்க வித்தியாலய அணி கைப்பற்றி சம்பியன் பட்டத்தை கைப்பற்றும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்பட்டது. இதன் பின்னர் சுதாகரித்துக்கொண்ட சோமஸ்கந்தா கல்லூரி அணி நான்காவது செட்டை 25-23 என்ற செட் கணக்கில் கைப்பற்றி சமப்படுத்தியதுடன், ஐந்தாவது செட்டை 19-17 புள்ளிகள் அடிப்படையில் வெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. இப்போட்டி பெரும் பரபரப்பாக இடம்பெற்றதுடன் கரப்பந்தாட்ட இரசிகர்களுக்குப் பெருவிருந்தாகவும் அமைந்திருந்தது.

இதேவேளை, இன்று வவுனியாவில் இடம்பெறவுள்ள மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடருக்கு யாழ். மாவட்டம் சார்பாக மேற்படி இரு பாடசாலை அணிகளும் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்



(நெல்லியடி)

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகம் நடத்திய ஐந்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் தொடரில் ஞானம்ஸ் அணி கிண்ணத்தை வென்றுள்ளது. வடமராட்சிப் பிரதேச மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில், கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஞானம்ஸ் அணியும், நியூபவர் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூபவர் அணி நான்கு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செந்தூரன் ஆட்டமிழக்காது 24, பிரகாஸ் 14, கிரிதரன் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுவேந்திரன் இரண்டு, சுதர்சன், குணதீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 58 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஞானம்ஸ் அணி 4.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுகந்தன் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 20, அனுசயந்தன் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். பந்து வீச்சில் நிபந்தன், செந்தூரன், பிரகாஸ் தலா ஒவ்வொருவிக்கெட்டை வீழ்த்தினர்.




இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சுவேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் கனகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதபாரணம், சமூர்த்தி உத்தியோகத்தர் இ. உதயகுமார், கிராம சேவகர் வைத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டி அணிகளுக்கு கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

இதேவேளை, ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் ஞானம்ஸ் அணியை வீழ்த்தி நியூபவர் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# வென்றது கொக்குவில் கே.சி.சி.



(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திவரும் இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாடத் திடலில் இடம்பெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியினை எதிர்த்து கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதன்போது, கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணி 53:39 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

# சொக்ளேற் தங்கம்!



தங்கத்தை கட்டிகளாகவும், நகைகளாகவும், நாணயங்களாகவும் உலகம் முழுவதும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அதிலும் புதுமையை புகுத்தும் வகையில் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்கள் புதிய வடிவிலான தங்கக்கட்டியை "வில்லையாக்கி" சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

நாம் அன்றாடம் உபயோகப்படுத்தும் ஏடிஎம் கார்ட் அல்லது கிரெடிட் கார்ட் போன்று தோற்றமளிக்கும் இந்த தங்கக்கட்டிகள் பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும் அது சுமார் 50 முதல் 100 கிராம் தங்கத்தால் ஆனது.

பணக்காரர்கள்,. தொழிலதிபர்கள் கிலோ கணக்கிலான தங்கக்கட்டிகளை வாங்கிச் சேமிக்கிறார்கள். ஆனால் நடுத்தர வர்க்கத்தினர்தான் சிறிய அளவில் தங்கக் காசுகளையோ அல்லது 100 கிராம் வரை உள்ள தங்கக்கட்டிகளையோதான் வாங்கிச் சேமிக்கின்றனர். அவர்களின் அவசரத் தேவைக்காக அல்லது அன்பளிப்பு தருவதற்காக இந்த வகை தங்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக முதலீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கார்ட் வடிவிலான தங்கக்கட்டியின் வடிவமைப்பு கட்பரீஸ் சொக்ளேற் போன்று வரிசை வரிசையாக உள்ளது. சொக்ளேற் வில்லைகளை உடைத்துச் சாப்பிடுவது போன்று இதிலுள்ள ஒவ்வொரு துண்டையும் எளிதாக கையால் உடைத்து எடுத்துவிடலாம்.

யாருக்காவது அவசரத் தேவைக்காக பணம் தேவைப்பட்டாலோ அல்லது பரிசளிக்க விரும்பினாலோ அதை உடனே உடைத்துக் கொடுத்துவிடலாம். ஒவ்வொரு சிறிய துண்டும் 99.9 சதவீதம் தூய்மையான 1 கிராம் தங்கமாகும். இதற்கு "காம்பிபார்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஏடிஎம் மிஷின்கள் போன்று ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் ஆகிய நாடுகளில் தங்கம் வழங்கும் கருவிகள் புழக்கத்தில் உள்ளன. 2010ஆம் ஆண்டு மட்டும் இந்தக் கருவிகளின் மூலம் சுமார் ரூபா 380 கோடிக்கு தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 50 ஆயிரம் பேர் இந்த கருவியின் மூலம் தங்கத்தை பெற்றுள்ளனர்.

தங்க விற்பனையின் மற்றொரு மைல்கல்லாக இந்த "காம்பிபார்" தங்கக்கட்டிகள் விளங்கும் என முதலீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் வெற்றியைப் பொறுத்து மற்ற நாடுகளும் இதை அறிமுகப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.




# அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு!

கவிஞர் கண்ணதாசன் திராவிட இயக்கத்தின் பிரச்சாரப்பீரங்கியாக ஒருகாலத்தில் இருந்தவர்.




பின்னர் திராவிட இயக்கத்தின் போக்கில் வெறுப்படைந்து அதிலிருந்து வெளியேறினார். அவர் தனது தவறுகளையும் அனுபவங்களையும் வனவாசம் என்ற நூலில் மனந்திறந்து எழுதியுள்ளார். திராவிட இயக்கத் தலைவர்களின் பொய்த்தனங்களை இன்று விளங்கிக் கொள்வது கஷ்டமில்லை. ஆனால் கண்ணதாசன் பலவருடங்களுக்கு முன்பே இவற்றையெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். அவர் கூறியுள்ள ஒரு சம்பவம் திராவிடத் தலைவர்கள் எவ்வளவு தூரம் திராவிடநாடு கோரிக்கையில் விசுவாசமாக இருந்தார்கள் என்பதனைக் காட்டுகிறது.

திராவிடநாட்டை உண்மையென நம்பிய கண்ணதாசன் "திராவிடநாட்டை அடைந்தே தீருவோம்" என்று ஒருநாள் உணர்ச்சிகரமாகப் பேசிக்கொண்டிருந்தார். மேடையின் பின்னுக்கிருந்த "சிந்தனைச்சிற்பி" சிற்றரசு "இவனுக்கு ஒரு கடப்பாறையும் மண்வெட்டியும் கொண்டுவந்து கொடுங்கோடா. திராவிடநாட்டுக்கு வேலி போடட்டும். இறங்கடா மேடையாலை." என்று கூறினார்.

"திராவிடநாடு எங்கேயிருக்கிறது? என்ற கேள்விக்கு திராவிடத் தலைவர்கள் கூறிய பதிலை எழுதவே கூச்சமாயிருக்கிறது. மொத்தத்தில் திராவிடத் தலைவர்களுக்கு திராவிடநாடு கோரிக்கை ஒரு முசுப்பாத்தி.

திராவிட இயக்கத் தொடக்ககாலத்தில் பல தெலுங்கர்கள் இயக்கத்தில் இருந்தார்கள். வைகோ பிற்பட்ட காலத்தில் வந்து சேர்ந்தார். தமிழ்நாடு மேல்சபைத் தலைவராகவிருந்த சிற்றரசு ஒரு தெலுங்கர். 1944ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் நீதிக்கட்சி திராவிடர் கழகமாக மாறியது. மாநாட்டில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற கோரிக்கை முன்வைக்கப்படவிருந்தது. "அப்படியென்றால் நாங்கள் எங்கே போவது?" என்று சிற்றரசு போன்றவர்கள் கேட்டப்டியாற்றான் அந்தக் கோரிக்கை "திராவிடநாடு திராவிடருக்கே" என மாற்றப்பட்டது. திராவிடநாடு கோரிக்கை தமிழர், மலையாளிகள், கன்னடர், தெலுங்கர் என்போரை உள்ளடக்கினாலும் அக் கோரிக்கை தற்போதைய கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் துப்புரவாக எடுபடவில்லை. திராவிடம் என்ற கருத்து இன்று மீள்பரிசீலனைக்கு உட்பட்டு வருகிறது. "திராவிடம் பேசி அழிந்தோம்" என்று தமிழ்த்தேசியம் பேசுவோர் பலர் இன்று கூறுகின்றனர். கேரளம், கர்நாடகம், ஆந்திர மாநிலங்கள் தமிழகத்தை நதிநீர் போன்ற விடயங்களில் வஞ்சிக்கின்றன என்பது அவர்களின் நிலைப்பாடு. சீமான் இப்போது பெரியார் பற்றிய சர்ச்சை ஒன்றில் ஈடுபட்டிருக்கிறார்.


சிந்தனைச்சிற்பி என்பது சிற்றரசின் பட்டப்பெயர். திராவிட இயக்கத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பட்டப்பெயரை வைத்திருந்தார்கள். தலைவர்களை பெயர் சொல்லிக் கூப்பிடுவது தலைவர்களுக்கு மரியாதைக் குறைவாகக் கருதப்பட்டது. கருணாநிதியை "தலைவர்" அல்லது "கலைஞர்" என்றுதான் குறிப்பிடவேண்டும். கருணாநிதியை கருணாநிதி என்று பெயர் சொல்லிய இலங்கைத்தமிழர் ஒருவர் வாங்கிக்கட்டிக்கொண்ட சம்பவம் சுவையானது. 1983ஆம் ஆண்டு தமிழ்ப்படம் ஒன்றிற்கு "விடுதலைப்புலிகள்" என்று பெயர் சூட்டப்பட்டது. படத்தின் பெயரை மாற்றுவதற்காக பிரான்சில் இருந்து வந்த ஒரு இலங்கைத்தமிழர் இன்னொரு தி.மு.க பிரமுகருடன் தி.மு.க.வின் ஒரு குட்டித்தலைவரைப் பார்க்கச் சென்றார்.



குட்டித்தலைவர் வந்தவர்களை என்ன விடயம் என்று கேட்டார். பிரான்சிலிருந்து வந்தவருக்கு தமிழ்நாடு "பந்தா" அரசியல் பற்றி ஒன்றும் தெரியாது. "விடுதலைப்புலிகள் என்ற பெயரில் படம் எடுக்கினம். படம் எடுக்கிறவர் கருணாநிதிக்கு வேண்டியவர். கருணாநிதி சொன்னால் அவர் பெயரை மாற்றுவார்." என்று இலங்கைத்தமிழர் கூறினார். "என்ன சொன்னாய்? கருணாநிதியோ! எழும்பு" என்று சொல்லி குட்டித்தலைவர் வந்தவர்களை விரட்டியடித்தார்.

திராவிட இயக்கப் பாணியைப் பின்பற்றி இலங்கையிலும் தமிழரசுக்கட்சி, கூட்டணித் தலைவர்கள் பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். பெரும்பாலான ஆயுதப்போராட்ட இயக்க தலைவர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தனர். "கொலையிலிருந்து தப்பிறதே பெரும்பாடு. இதற்குள் பட்டப்பெயர் ஒரு கேடா?" என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும்! இன்றைய தலைவர்கள் இன்னமும் ஏன் பட்டப்பெயர்களை வைக்கவில்லை? என்று விளங்கவில்லை. "புயல்" வரிசையில் "அறிக்கைப்புயல்", "சந்தர்ப்பவாதப்புயல்" என்று ஏதாவது பெயர்கள் வைப்பது மிகவும் பொருத்தமாயிருக்கக்கூடும்!

- ருத்ர தாண்டவன்




இந்த புகைப்படம் 1936 இல் ஜேர்மனியில் உள்ள ஹம்பேர்கில் எடுக்கப்பட்டது. படத்தில் வட்டத்திற்குள் உள்ளவரின் பெயர் ஒகஸ்ட் லண்ட்மெஸ்ஸெர் (August Landmesser). கப்பல் கட்டுமான தொடக்க விழாவிற்கு சர்வதிகாரி ஹிட்லர் வந்த பொழுது அங்கு இருந்த அனைவரும் நாஸி வணக்கம் (nazi salute) தெரிவிக்கின்றனர். அதில் ஒகஸ்ட் லண்ட்மெஸ்ஸெர் மட்டும் கையை உயர்த்தி தலைவணங்க மறுக்கிறார். ஹிட்லருக்கு தலைவணங்க மறுத்ததற்கும் யூத பெண்ணை திருமணம் செய்த காரணத்திற்காகவும் 1936 இல் சிறையில் அடைக்கப்படுகிறார். 1941 இல் விடுதலைக்குப் பிறகு இரண்டாம் உலகப் போரில் தோல்வியின் விளிம்பில் இருந்தும் நாஸி ஜேர்மனிப் படையில் கட்டாயமாக இணைக்கப்படுகிறார். 1944 ஆண்டு தன் சொந்த நாட்டுப் படையால் கொல்லப்படுகிறார்.

மொத்த நாஸி ஜேர்மனியும் ஹிட்லரை ஆதரித்து நிற்கும் பொழுது தனி மனிதராக தன் எதிர்ப்பை வரலாற்றில் பதிவு செய்கிறார் ஒகஸ்ட் லண்ட்மெஸ்ஸெர்.

# எல்லோர் முகத்திலும் கரி...

ஒரே ஒரு ஆள், எல்லோர் முகத்திலும் கரியைப் பூசிவிட்டார். ஆம், டில்லியில் ஒரு கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட மருத்துவ மாணவியின் சகோதரர் சில உண்மைகளை அம்பலப்படுத்தி விட்டார். பலாத்காரம் செய்யப்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த தனது சகோதரி இறப்பதற்கு முன்பு தன்னிடம் கூறிய உண்மையை அவர் இப்போது போட்டு உடைத்திருக்கிறார்.

"அந்த (பலாத்கார) சம்பவத்திற்குப் பிறகு அருகில் இருந்தவர்களிடமும், அந்த வழியாகச் சென்றவர்களிடமும் தனக்கு உதவி செய்யுமாறு என் தங்கை கேட்டிருக்கிறார். ஆனால் யாரும் உதவ முன்வரவில்லை. சம்பவம் நடைபெற்ற சுமார் 2 மணி நேரத்திற்குப் பிறகுதான் எனது தங்கை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அந்த இடைப்பட்ட நேரத்தில் அவருடைய உடலிலிருந்து இரத்தம் ஏராளமாக வெளியேறியிருந்தது.

விபத்து, தாக்குதல் என எதிர்பாராமல் பாதிக்கப்படுபவர்களுக்குத் தயக்கம் இல்லாமல் உடனடியாகப் பொதுமக்கள் உதவிசெய்ய முன்வர வேண்டும். இந்த விஷயத்தில் பொதுமக்களின் மனோ பாவம் மாற வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இது நம் ஒவ்வொருவரின் முகத்திலும் அறைந்ததுபோல இல்லையா?

மாணவி பலாத்காரம் செய்யப்பட்டு குற்றுயிரும், குலை உயிருமாக நடுரோட்டில் உடலில் ஆடை யின்றி, இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது அதைப் பார்த்துவிட்டு "ஐயோ பாவம், யாரோ ஒருத்தி அடிபட்டுக் கிடக்கிறாள்" என முகத்தைத் திருப்பிக்கொண்டு வேகமாக அந்த இடத்தைக் கடந்து சென்றவர்கள் எத்தனை பேர்? அவர்களில் யாராவது ஒருவர் அந்தப் பெண்ணுக்கு உதவி செய்திருந்தால் அவர்



உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு இருந்திருக்குமே?

செயலாற்ற வேண்டிய நேரத்தில் விட்டுவிட்டு அதன் பிறகு கூச்சல் போடுவதால் யாருக்கு என்ன பயன்? நாம் எந்த தார்மிக அடிப்படையில் சாலைக்கு வந்து கூச்சல் போட்டோம்? அதற்கு நமக்கு என்ன அருகதை உண்டு என்று ஒன்றுக்கு பத்து முறை எண்ணிப் பார்க்க வேண்டிய தருணம் இது.

நடந்த சம்பவம் மன்னிக்க முடியாத குற்றம். அதற்குக் கடும் தண்டனை அளிக்க வேண்டியது கட்டாயம். ஆனால், அந்த உயிரைக் காப்பாற்ற ஒரு வாய்ப்பு கிடைத்தும் உதவாமல் இருந்துவிட்டவர்கள் எத்தனை பேர்?

டில்லி சம்பவம் மட்டுமல்லாது இப்படிப்பட்ட வேறு பல சம்பவங்களை நேரில் பார்த்துவிட்டு உதவாமல்சென்ற நம் ஒவ்வொருவருக்கும் உள்ள குற்ற உணர்வுக்கு யார் தண்டனை தருவது?

இது டில்லி மாணவி விஷயத்தில் மட்டுமல்ல. விபத்தோ, தாக்குதலோ நேரிடும் எல்லா இடங்களிலும் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவோரை விட வேடிக்கை பார்த்துக் கொண்டு செல்வோர்தான் அதிகம். அவர்களுக்கு உதவி செய்யப்போய் நாம் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாதே என்ற அதீத முன்னெச்சரிக்கை நம்மைச் செயல்படவிடாமல் தடுக்கிறது. பொலிஸ், நீதிமன்றம் என்று அலைய முடியுமா என்று ஒரு சமாதானத்தை கூறிக் கொண்டு ஒதுங்கிப் போகிறோம்.

விபத்து மற்றும் தாக்குதலில் ரத்தக் காயம் ஏற்பட்டவர்களுக்கு அடுத்த அரை மணி நேரம்தான் முக்கியமானது. அதை மருத்துவத் துறையினர் Golden Hour என்பார்கள்.

அந்த நேரத்திற்குள்ளாக பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் அனுமதித்து ரத்தம் வெளியேறுவதைத் தடுத்து உரிய சிகிச்சை அளித்தால் அவர் உயிர் பிழைக்க வாய்ப்பு உண்டு.

எதுவுமே நமக்கோ அல்லது நமது இரத்த உறவுக்கோ நடக்காத வரையில் அதன் பாதிப்பு நம்மைச் சுடுவதில்லை. நாம் நேரடியாக அனுபவப்படும்போதுதான் எல்லா வலியும் தெரியும்.

சரி, இனிமேலாவது விபத்து அல்லது தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நம்மால் இயன்ற அளவு உதவ வேண்டும் என்ற மனநிலையை வளர்த்துக் கொள்வோம்.

**- தினமணி**



## நேர்முகத்தேர்வு!

**கேள்வி:**
விமானத்துக்குள் 50 சங்கற்கள் இருக்கின்றன. அதில் ஒன்றை வெளியே எறிந்தால் மீதி எத்தனை இருக்கும்?

**பதில்:**
ஈஸி, 49.

**கேள்வி:**
ஒரு யானையை ஃப்ரிட்ஜினுள் வைப்பதற்கு மூன்று படிமுறைகள் என்ன?

**பதில்:**
1. ப்ரிட்ஜைத் திறத்தல்.
2. யானையை உள்ளே வைத்தல்.
3. ப்ரிட்ஜை மூடுதல்.


**கேள்வி:** ஒரு மானை ப்ரிட்ஜினுள்ளே வைப்பதற்கு நான்கு படிமுறைகள் என்ன?

**பதில்:**
1. ப்ரிட்ஜைத் திறத்தல்.
2. யானையை வெளியே எடுத்தல்.
3. மானை உள்ளே வைத்தல்.
4. ப்ரிட்ஜை மூடுதல்.

**கேள்வி:** சிங்கத்தின் பிறந்த நாள். காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் அங்கு வருகின்றன, ஒன்றைத் தவிர, ஏன்?

**பதில்:** ஏனென்றால் மான் ப்ரிட்ஜினுள் இருக்கிறது.

# அழகின் உபாசகர்



நா.பாவுக்கு (நா.பார்த்தசாரதி) ஒரு நல்ல பழக்கம். எந்தக் கடிதமாய் இருந்தாலும் உடன் மறுமொழி எழுதிவிடுவார். பள்ளியில் லெஷர் பீரியட் உண்டு. அந்த நேரத்தில் நோட்ஸ் ஓ.்.ப் லெஸன் எழுதுவார். ஒரு கதையை எழுதி முடித்துவிட்டு அடுத்த கதை எழுதுவது என்ற பழக்கம் இல்லை. ஒரே சமயத்தில் இரண்டு மூன்று நாவல்களை எழுத ஆரம்பித்து தினமும் ஒவ்வொரு நாவலிலும் ஒரு அத்தியாயம் எழுதிவிடுவார். அப்போது பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்ட எல்லாப் போட்டிகளிலும் ஆவலுடன் கலந்து கொண்டார்.

கிராமத்து கறந்த பாலில் நல்ல காபி- இரண்டு, மூன்று முறை அருந்துவார். எனக்கு கிராமத்தில் காபி பழக்கம் கிடையாது. நா.பா வீடு வந்துதான் எனக்குக் காபி பழக்கம் ஏற்பட்டது. கிணற்றில் தண்ணீருக்கும் பஞ்சமில்லை. அதனால் வாளிவாளியாகத் தண்ணீர் இறைத்துக் குளிப்பார். மைசூர் சாண்டல் சோப்தான் உபயோகிப்பார். ஒரு வாரத்திற்கு ஒரு சோப் காலியாகிவிடும். கிணற்றடியே மைசூர் சாண்டல் மயமாகிவிடும்! அவர் மீது மைசூர் சாண்டல் பவுடர் மணக்கும். அதுவும் சாண்டல் பவுடர்தான்! குளிக்கும் முன் தினமும் தலையில் கொழும்பு தேங்காய் எண்ணெய் தடவிக் கொண்டு குளிப்பார். தினமும் ஷேவ் செய்துகொள்வார். அவர் தினமும் தவறாமல் வெண்பொங்கல், தக்காளி-தயிர் பச்சடி, பொங்கலில் முதலில் நெய் ஊற்றி- பின்னர் தயிர் ஊற்றிச் சாப்பிடுவார். பகலில் சாம்பார், ரசம், கூட்டுப் பொரியல், அப்பளம் என்று ஒன்றும் குறைவில்லாமல் இருக்க வேண்டும்!

தினமும் இரண்டு வேளைக் குளியல். துணிகளை வீட்டில் துவைப்பது இல்லை. சலவைக்குத்தான் போடுவார். மடிப்புக் கலையாமல் அணிவதில் கவனம் செலுத்துவார். இரவில் தினமும் சந்தனக் கல்லில் சந்தனக் கட்டையை அரைத்துத் தர வேண்டும். அதை இரவில் முகத்தில் பூசிக்கொள்வார்! மொத்தத்தில் அழகின் உபாசகர், சாப்பாட்டு பிரியர்! அதனால்தான் அந்த மாபெரும் ருசி எழுத்திலும் படிந்துவிட்டதோ!

**(வல்லிக்கண்ணன் தொகுத்த 'தீபம் நா.பார்த்தசாரதி' என்ற நூலில்)**

# பயனற்ற செய்திகளின் களஞ்சியம்!

**- அ. மார்க்ஸ்**




என்சைக்ளோபீடியாக்களின் (கலைக் களஞ்சியங்கள்) தொகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன், ஆகா, என்னென்ன தலைப்புகளிலெல்லாம் கலைக்களஞ்சியங்கள் உள்ளன!

கனவுகள், பேய்ப் பிசாசுகள், Prostitution, Serial Killers, மனித மூளை..... இவை குறித்தெல்லாம் தனித் தனி என்சைக்ளோபீடியாக்கள்!

"Encyclopedia of Useless Information" என்றும் ஒன்று. புரட்டிப் பார்த்தேன். அட்டகாசமான பல பயனற்ற செய்திகள். எப்படித்தான் தொகுத்தார்களோ!

◗ பாரிஸ் நகரத்தில்தான் முதன்முதலில் (1463) வீட்டுக் கதவுகளுக்கு இலக்கமிட்டார்களாம், அதற்கு முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்பே லண்டன் கதவுகளில் இலக்கமிடத் தொடங்கினார்களாம்.

◗ முதன்முதலில் விவாகரத்தான அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன்.

◗ கிரேக்கத் துன்பியல் காவிய ஆசிரியர் ஈஸ்கிலஸ்சின் தலை மீது ஒரு ஆமை விழுந்து மண்டை உடைந்துதான் இறந்து போனாராம். அவரது வழுக்கைத் தலையை பாறை எனக் கருதி ஒரு கழுகு ஆமை ஓட்டை உடைப்பதற்காக அவர் தலை மீது ஆமையை வீசி அடித்ததால் வந்தது வினை.

◗ 1991 வரை ஆங்கில எழுத்து A யில் தொடங்கி A யில் பெயர் முடியாத நாடு ஆப்கானிஸ்தான். சோவியத் யூனியன் உடைவுக்குப் பிறகு அஸர்பெய்ஜானும் சேர்ந்து கொண்டது.

◗ கீபோர்டில் ஒரே வரிசையிலுள்ள எழுத்துக்களால் டைப் செய்யத்தக்க பெயரை உடைய ஒரே அமெரிக்க மாநிலம் ALASKA. 1867இல் ரஷ்யாவிடமிருந்து 7,200,00 பவுண்ட்களுக்கு விலைக்கு வாங்கப்பட்டது அது.

◗ மே15,1930 அன்றுதான் முதன்முதலில் விமானத்தில் பணிப்பெண் பணி அமர்த்தப்பட்டாராம். அவர் பெயர் எல்லன் சர்ச்.

◗ dinner party என்கிற சொல்லை முதன் முதலில் பாவித்த எழுத்தாளர் ஜேன் ஆஸ்டின்.

◗ தாடி வைத்தவர்கள் யாரும் தனது படையில் இருக்கக்கூடாது என அலெக்சாண்டர் ஆணையிட்டிருந்தாராம். தாடி இருந்தால் சண்டையின்போது எதிரி எளிதாகப் பிடித்து இழுத்துவிடமுடியும் என்பதால்.

◗ உலகிலேயே ஆண்குறிகளுக்கான மியூசியம் ஐஸ்லாந்தில்தான் உள்ளது.

◗ முதல் அமெரிக்க பிரம்மச்சாரி ஜனாதிபதி, ஜேம்ஸ் புச்சானன்.

◗ இலஞ்சம் வாங்கியதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டபின் விஞ்ஞானியான ஃப்ரான்சிஸ் பேகன், சளி பிடித்துச் செத்தாராம். (கோழி) இறைச்சியை பனிக்கட்டிக்குள் வைத்து முதன் முதலாகக் குளிர் பதனம் செய்ய முயற்சித்தபோது இப்படி நடந்துள்ளது.

ரூம் போட்டு உட்கார்ந்து தொகுத்திருப்பார்கள் போல!




அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## பொது அறிவுத் துணுக்குகள்

1) இலங்கையின் மிக நீளமான நதி யாது?
2) பம்பரகந்த நீர்வீழ்ச்சி எங்குள்ளது?
3) சிங்கராஜக்காடு எங்குள்ளது?
4) சிவனொளிபாதமலை எம்மாவட்டத்தில் உள்ளது?
5) இலங்கையின் பரப்பளவில் சிறிய மாவட்டம் எது?

## சிந்தனைக்கு விருந்து

1) 4 x3 = 7, 5 x 2 = 7, 6 x 3 = 9 எனின் 3 x 2 x 4 இன் பெறுமானம் யாது? (............................)

2) சதுரம் ஒன்றின் பரப்பளவு 69% தால் அதிகரிக்கப்படுமாயின் சதுரத்தின் ஒருபக்கத்தின் நீளம் எத்தனை சதவீதத்தால் அதிகரிக்கும்? (............................)

3) 70% நீல மாபிள்களைக் கொண்ட பெட்டி ஒன்றில் சிவப்பு மாபிள்களிலும் பார்க்க 8 நீல மாபிள்கள் அதிகமானதாயின் மொத்த மாபிள்களின் எண்ணிக்கை யாது?

4) கணேஷ் பொருள் ஒன்றை ரூபா 130 இற்கு விற்கும்போது 10% நட்டம் அடைகிறார். அவர் 20% இலாபம் அடைவதற்கு இப்பொருளை விற்கவேண்டிய விலை யாது? (............................)

5) அபிராமி தனது பிரதான ஐந்து பாடங்களில் ஐம்பது என்னும் சராசரிப் புள்ளிகளைப் பெற்றுள்ளார். எல்லா ஆறு பாடங்களிலும் ஐம்பத்தைந்து என்னும் சராசரியைப் பெறுவதற்கு அவர் தனது ஆறாம் பாடத்தில் எவ்வளவு புள்ளிகளைப் பெற வேண்டும்? (............................)

## சிந்தித்துப் பதில் அளியுங்கள்!

ஒரு நகரத்தில் உள்ள உத்தியோகத்தர்களில் ஆசிரியர்களும், கைத்தொழிலாளர்களும் அடங்குவர். சில ஆசிரியர்கள் அதிபர்களாவர், கைத்தொழிலாளர்களில் ஆண்கள் மட்டும் நிர்வாகத் தொழில் செய்கின்றனர். 652 உத்தியோகத்தர்களில் 374 பேர் ஆண்கள், 198 ஆசிரியர்கள் 83 கைத்தொழிலாளர்களில் 8 பேர் நிர்வாகிகள் 76 ஆண்கள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 14 ஆண் அதிபர்களும் 4 பெண் அதிபர்களும் உள்ளனர். 122 ஆண்கள் ஆசிரியத் தொழிலோ கைத்தொழிலோ செய்யவில்லை.

1) வேலை செய்யும் பெண்கள் எத்தனை பேர்? (.........)
2) கைத்தொழில் செய்யும் பெண்கள் எத்தனை பேர்? (.........)
3) ஆண் உதவி ஆசிரியர்கள் எத்தனை பேர்? (.........)
4) ஆசிரியத் தொழிலோ அன்றேல் கைத்தொழிலோ செய்யாத பெண்கள் எத்தனை பேர்? (.........)
5) பெண் உதவி ஆசிரியர்கள் எத்தனை பேர்? (.........)

## புதிர்ப்போட்டி 25 இல் வெற்றியீட்டியோர் விபரம்



பெயர்: கி.கயறூபி
பாடசாலை: யா/சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை: யா /சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



பெயர்: க.அபிராமி
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பெயர்: த.மதுஷா
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

## புதிர்ப்போட்டி 25 இற்கான சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

| | | | |
|---|---|---|---|
| பெயர்: மெ.இங்கிதை<br>பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. | பெயர்: ர.அபிதா<br>பாடசாலை: யா/ இராமநாதன் கல்லூரி. | பெயர்: ர.மேருஜா<br>பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. | பெயர்: இ.தமிழினி<br>பாடசாலை: யா/ மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரி. |
| பெயர்: க.அஜித்தா<br>பாடசாலை: மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி. | பெயர்: யோ.சிவரஜினி<br>பாடசாலை: யா/ மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகாவித்தியாலயம். | பெயர்: சி.சாளினி<br>பாடசாலை: யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி. | பெயர்: வி.யதுர்வினா<br>பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தி. |
| பெயர்: க.பவித்திரா<br>பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். | பெயர்: அ.ஒனால்ட்குருஸ்<br>பாடசாலை: மன்/ புனித வளனார் றோ.க.த.வித்தி. | | |

**தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்**

## புதிர்ப்போட்டி 25 இற்கான விடைகள்

1
1) Football 11
2) Cricket 11
3) Volleyball 06
4) Netball 07
5) Hockey 11

2
1) 9
2) 4
3) 2
4) 5

புதிர்ப்போட்டி 27 இற்கான விடைகளை எதிர்வரும் பெப்ரவரி 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................

பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- :-..............................

தொலைபேசி இல.:-..............................

முகவரி :-..............................

..............................

**முக்கிய குறிப்பு**


தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளுடன் வடமாகாண ஆளுநர் கலந்துரையாடல்





(யாழ்ப்பாணம்)

உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அரச திணைக்களங்களின் கொள்கைகள், நடைமுறைகள் தொடர்பாக ஆளுநரினால் விளக்கமளிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டும் சிறந்த அடைவுகளை பெறும் விதத்தில் அரச திணைக்களங்களுடன் இணைந்து செயற்படுமாறு அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை ஆளுநர் கேட்டுக் கொண்டார். அத்துடன் செற்திட்டங்களை ஆரம்பிக்க முன் வட மாகாண சபையின் அனுமதி கட்டாயமாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும், இயன்றவரை ஒரேவிதமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை தவிர்க்குமாறும் ஆளுநர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் துறைசார் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

# வீதிப்புனரமைப்பு நடவடிக்கை; மக்களை ஒத்துழைக்க கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு- வங்களாவடி மலை ஐயனார் வீதி க மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக செல்லும் அரச,தனியார் பேருந்துகள் வங்களாவடி வரை தற்போது சேவையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படும் இவ்வீதியால் அரச, தனியார் பேருந்துகள் இதனூடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இவ் வீதிப் பகுதியில் வாழும் மக்கள் வங்களாவடி சந்திக்கு வந்து பேருந்துகளில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வேலணைப்பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 15 கோடி ரூபா இவ்வீதிப் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் வேலணை பிரதேச சபை உறுப்பினர் சி.ந. கருணாகரகுருமூர்த்தி தொதிவித்துள்ளார்.

இவ்வீதி புனரமைக்கப்படும் வரை நயினாதீவு தென்பகுதி மக்கள் வங்களாவடிக்கு வந்து போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு அவர் மக்களை கேட்டுள்ளார். (175)

# கவனிப்பாரற்ற பேருந்து தரிப்பிடம் சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட கொடிகாமம்- பருத்தித் றை வீதியில் உள்ள பேருந்து தரிப்பிடமானது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ் பேருந்து தரிப்பிடத்தினை வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் போன்ற பகுதிகளிற்கு செல்லும் பொதுமக்கள், அரச ஊழியர்கள் மாணவர்கள் என ஏராளமானவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் இப் பேருந்து தரிப்பிடத்தின் பின் புறத்தில் பியர்ரின் பேணிகள் பொலித்தீன் பைகள் போன்றன காணப்படுவதாகவும் இப் பேருந்து இவ்வாறான பொருட்களில் நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பரவக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் இப் பேருந்து நிலையத்திற்கு அருகில் மலசல கூடம் உள்ளபோதிலும் அதனை பயன்படுத்தாது இவ் பேருந்தின் பின் புறத்தில் சிறுநீர் கழிப்பதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பேருந்து நிலையத்திற்குள்ளே சையிக்கிள், மோட்டார், சையிக்கிள் போன்றவற்றை நிறுத்துவதனால் பிரயாணிகள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் இப் பேருந்து தரிப்பிடத்திற்கு மின்சார வசதி செய்யாது இருப்பதனால் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்த பகுதியாக காணப்படுவதோடு சமுதாய சீர்கேடு போன்ற நிகழ்வுகள் இடம்பெற வழிகோலும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)



தொடர் மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ள யாழ். பொம்மைவெளி மக்களுக்கான சமைத்த உணவு அண்மையில் மாலை 2 மணியளவில் இராணுவத்தால் வழங்கப்பட்டது. சுமார் 35குடும்பங்கள் இதன்போது பயன் பெற்றன. இராணுவத்தின் 23ஆம் கஜபா படைப்பிரிவின் ஏற் பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் படைப்பிரிவின் பொறுப் பதிகாரி லெப்டினனட் கேணல் அருண விஜயகோன் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தலைவர் கே.எம். நிலாம் ஆகியோர் கலந்து கொண்டார். (105)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப பரீட்சைக்கு தகைமை பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் எழுத்துப்பரீட்சை மும்மொழிகளிலும் எதிர்வரும் மேமாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளதுடன் இதில் தெரிவு செய்யப்படுவர் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கை பரீட்சை திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப்பரீட்சைகள் கிளை) பெலவத்தை பத்தரமுல்லை என்ற முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.மேலதிக விபரங்களை தினமுரசு காரியாலயத்திலோ அல்லது 11.01.2013 வர்த்தமானியிலோ பார்வையிட முடியும்.

# 2013 புத்தாண்டுப் பலன்கள்



## தனுசு

மனதுக்குச் சரியெனப் பட்டதையே செய்வீர்கள். கெட்ட நண்பர்களை அறவே ஒதுக்கிவிடுவீர்கள். புத்தாண்டு பிறக்கும்போது சனிபகவான் உங்களின் லாப வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பணப் புழக்கம் அதிகரிக்கும். இனி திட்டமிட்ட காரியங்கள் தடையில்லாமல் முடியும். புதுச் சொத்து சேரும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதை கிடைக்கும்.

உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் வெற்றியடையும். பிள்ளைகளிடமிருந்த பிடிவாதக் குணம் நீங்கி உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். நாடாளுபவர்கள் உதவுவார்கள். கோயில் கும்பாபிஷேக திருப்பணி கமிட்டியில் இடம் பிடிப்பீர்கள். மே 28ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் சில நேரங்களில் வீண் பழி, ஏமாற்றம், அலைச்சல், டென்ஷன், வேலைச்சுமை, செரிமானக் கோளாறு என வந்துநீங்கும். என்னதான் திட்டமிட்டு செயல்பட்டாலும் காரியங்களை இரண்டு மூன்று முறை அலைந்துதான் முடிக்க வேண்டியது வரும். எதிரிகளில் சிலர் நண்பர்களாவார்கள்.

தங்க ஆபரணங்கள், வீட்டுப் பத்திரங்களை கவனமாகக் கையாளுங்கள். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். சந்தேக புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உறவினர்கள், நண்பர்களுடன் கொஞ்சம் இடைவெளிவிட்டு பழகுவது நல்லது. ஆனால், மே 29ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் நுழைவதால் திடீர் திருப்பங்கள் உண்டாகும். சோர்ந்து கிடந்த நீங்கள் உற்சாகமாவீர்கள். பாதியிலேயே நின்று போன வேலைகள் முழுமையடையும். வீட்டில் தாமதமான சுப நிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

மகளுக்கு இருந்த கூடாப் பழக்கம் விலகும். பழைய சொத்தை விற்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. தள்ளிப்போன வெளிநாட்டுப் பயணம் அமையும். வேற்று மதத்தினர், மொழியினர் உதவுவார்கள். உங்களுக்கு 8ஆவது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது பணப்பற்றாக்குறையும் வரும். சமாளித்து விடுவீர்கள். குடும்ப அந்தரங்க விஷயங்களை எல்லாம் வெளியில் சொல்லி ஆறுதல் தேட வேண்டாம்.

இந்த வருடம் ஆரம்பிக்கும்போது செவ்வாய் உங்களுக்கு 2ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். சில நேரங்களில் காரசாரமாகப் பேசி சிலரின் நட்பை இழப்பீர்கள். சகோதர வகையில் விட்டுக் கொடுத்துப் போங்கள். தாய்மாமன் வகையில் கருத்து வேறுபாடுகள் வரக்கூடும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

கேது உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் பொறுப்பில்லாத்தனத்தை நினைத்து வருந்துவீர்கள். அவர்களின் போக்கிலேயே அவர்களை விட்டுப்பிடிப்பது நல்லது. தாய்வழி உறவினர்களிடையே மனஸ்தாபங்கள் வெடிக்கும். அடுத்தவர்களை விமர்சித்துப் பேசுவதை நிறுத்துங்கள். வறட்டு கௌரவத்திற்காக ஆடம்பரச் செலவுகள் செய்து கொண்டிருக்காதீர்கள்.

ராகு உங்கள் ராசிக்கு 11ஆம் வீட்டில் அமர்வதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர் பாசமாக நடந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். பழைய கசப்பான சம்பவங்கள் அவ்வப்போது மனதை வாட்டும்.

கன்னிப் பெண்களே! நிஜம் எது நிழல் எது என்பதை உணர்வீர்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும். தாமதமான திருமணம் வருடத்தின் பிற்பகுதியில் நல்ல விதமாக முடியும். மாதவிடாய்க் கோளாறு, தலைச் சுற்றல், தூக்கமின்மை வந்து நீங்கும். புதிய நண்பர்களை நம்பி ஏமாற வேண்டாம்.

மாணவர்களே! விளையாட்டுத்தனத்தை ஓரங்கட்டிவிட்டு படிப்பில் முழுக் கவனம் செலுத்துங்கள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! ஆதாரமில்லாமல் யாரையும் விமர்சித்துப் பேசவேண்டாம். சகாக்கள் சிலர் உங்களை புகழ்வதைப்போல இகழ்வார்கள்.

வியாபாரிகளே! பெரிய அளவில் முதலீடுகள் செய்து திணறாமல் அளவாக பணம் போடுங்கள். சந்தை நிலவரம் அறிந்து புது கொள்முதல் செய்யுங்கள். வாடிக்கையாளர்களை அன்பாக நடத்துங்கள். மருந்து, எண்டர்பிரைசஸ், துணி வகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் கருத்துவேறுபாட்டால் பிரிவார்கள்.

கணனி துறையினர்களே! அந்நிய நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களில் புது வாய்ப்பு கிட்டும். கலைஞர்களே! கிடைக்கின்ற வாய்ப்பு எதுவானாலும் ஏற்றுக் கொள்ளப் பாருங்கள்.

விவசாயிகளே! எரு கலைக்கும்போது தேள் கடிக்க வாய்ப்பிருக்கிறது. பயிரை பூச்சிகளிடமிருந்து காப்பாற்ற நவீன ரக பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துங்கள். இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் சின்னச் சின்ன தொந்தரவுகளை தந்தாலும் மையப்பகுதி முதல் எதிர்பாராத பணவரவு, வெற்றிகளை தரக் கூடியதாக அமையும்.

(தொடரும்...)

# அரசிற்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் மேற்குலக நாடுகள்

## சிங்கள ஊடகம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களின் பின்னணியில் இரண்டு மேற்குலக நாடுகள் செயற்பட்டு வருவதாக இலங்கை அரசு ஆதரவு சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை பயன்படுத்தி இந்த சக்திகள் அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்க முயற்சிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் போராட்டத்திற்கு நிதி மற்றும் வேறும் வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய நாடுகளே இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இரண்டு நாடுகளைச் சேர்ந்த தூதரகங்களும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்த தகவல்களை சர்வதேச சமூகத்திற்கு வழங்கி வருகின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுத்தும் நோக்கில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தி, அரசாங்கத்தை பதவியிழக்கச் செய்து, நாட்டை பிளவுபடுத்த குறித்த இரண்டு மேற்குலக நாடுகளும் முயற்சித்து வருவதாக சிங்களப் பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

# மரத்தில் மோதி வான் விபத்து ஒருவர் பலி; 7பேர் படுகாயம்



(சிலாபம்)

சிலாபம் - புத்தளம் வீதி தெதுருஓயாவிற்கு அருகில் இடம்பெற்ற வான் விபத்தில் ஒருவர் பலியானதோடு ஏழு இராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணி அளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ வைத்தியசாலையில் சாரதியாக பணியாற்றும் ஒருவரே விபத்தில் பலியானார். அநுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கு இராணுவ சிப்பாய்களை ஏற்றிவந்த வான் வீதியைவிட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது. காயமடைந்தோர் தேறிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹசித மடவல கொலை; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(களனி)

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவல கொலையுடன் தொடர்புபட்ட ஐந்து சந்தேகநபர்களும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மஹர பிரதான நீதவான் பண்டார சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான ரங்கன் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் களனி மற்றும் கிரிபத்கொட பகுதிகளில் வசிக்கும் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் நடாத்திய விசாரணையில் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கிய ஆசிரியர் சடலமாக மீட்பு

(கல்முனை)

நிந்தவூர் - அட்டப்பளம் சிங்காரபுரி சுமைதாங்கி ஆற்றில் நீராடியபோது காணாமல் போன ஆசிரியர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனை - பாண்டிருப்பைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி கனகரட்ணம் (வயது48) எனும் ஆசிரியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நிந்தவூர் - அட்டப்பளம் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் இவர் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாடசாலையிலிருந்து திராய்க்கேணியிலுள்ள தனது சகோதரர் வீட்டுக்குச் செல்லும் வழியிலுள்ள அட்டப்பளம் சிங்காரபுரி சுமைதாங்கி பாலத்தின் கீழுள்ள ஆற்றில் நீராடிய போது மழை வெள்ளம் காரணமாக ஆற்றில் இருந்து நீரால் அடித்துச் செல்லப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாரும் உறவினர்களும் இவரைத் தேடி வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தலைவர் பதவிக்கு மூவர் போட்டி

(கொழும்பு)



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிட மூன்று சட்டத்தரணிகள் முன்வந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உபுல் ஜயசூரிய, ஆர்.ஆர்.எஸ். தங்கராஜா மற்றும் திரந்த வலலியத்த ஆகிய மூவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக தற்போது விஜேதாஸ ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இவரது பதவிக்காலம் முடிகிறது. அதன்பின் இரண்டாம் தடவை போட்டியிடப்போவதில்லை என அவர் அறிவித்துள்ளார். இதனால் புதியவர்கள் போட்டியிட முன்வந்துள்ளனர். இவர்களுக்கான தேர்தல் பெப்ரவரி 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# பரமர் சங்கமம்



"துப்பாக்கி துப்பாய துப்பாக்கி தூக்கின் துப்பாக்கியம் தேடி வரும்" இது பரமருடைய பொழிப்புரை இது போன்ற வாக்கியத் தொடரொன்றும் பழந்தமிழ் இலக்கியத்தில் உண்டு.

எங்கடை பொடியள் துப்பாக்கி தூக்கியதால தமிழருடைய வாழ்வு, வளம், மானம், மரியாதை, பாண்பாடு, கல்வி எல்லாம் துலைச்சுப்போட்டு இருட்டுக்குள் வாழ்ந்து கொண் டிருக்கிறம்.

உந்தப் பெரிய பொடியங்களைப் பாத்துச் சின்னஞ் சிறிசுகளும் துப்பாக்கி விளையாட்டு விளையாடியதுகள். எங்கைதான் தேடி எடுக்குதுகளோ தெரியாது.

துப்பாக்கிக்கு இருக்கிற முட்டுக்காலுள்ள மொக்குத் தடிகளைத் தேடி எடுத்துக்கொண்டு விளையாட்டில் ஈடுபட்டிருப்பதைப் பாத்தால் வேடிக்கையாகத்தான் இருக்கும்.

இப்பெல்லாம் கொஞ்சம் குறைஞ்சு பேர்ச்சு. அந்தக் காலத்தில கோவில் திருவிழாக்களில் விளையாட்டுத் துப்பாக்கிகளை வாங்கி வந்து ஊருக்குள் ஒரே அமர்க்களமாத்தான் இருக்கும்.

இப்ப துப்பாக்கி எண்ட பெயரில் தமிழ்ச்சினிமாவே வந்திட்டுது. இது எங்கடை தமிழுக்குத்தான் புதிசு. ஆங்கிலத்திரைப்படங்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னதாகவே வந்து விட்டன.

ஒரு துப்பாக்கியுடன் தொடங்கி வரலாறு விதம் விதமான ஆயுதங்களுடன் வளர்ச்சி அடைந்ததாக மார்பு தட்டிக்கொண்டவர்களும் எங்களுக்குள் இருந்தனர்.

அதேவேளை தமிழினத்தின் தனித்துவத்தைச் சீரழித்து மூன்று பத்தாண்டுகள் வடுவாகவும் மறைந்து போயின. நாட்டில் புதிய கலாசாரத்தை உருவாக்க ஆயுதம் ஏந்த மார்க்சிய சித்தாந்தம் போதும் செய்துள்ளது.

அதற்கு முன்னதாக ஆளும் வர்க்கம் எனப்படும் முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளும் ஆயுதத்தையே அடக்குமுறைக்குக் கருவியாகப்பாவனைக்குட்படுத்தியதையும் அறிகிறோம்.

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் அமெரிக்காவில் இளைஞன் ஒருவன் சிறார்கள் கல்வி கற்கும் முன்பள்ளிக்குச் சென்று இருபத்தைந்துக்கும் அதிகமான பாலகர்களைக் கண்மண் தெரியாமல் சுட்டுக் கொன்று விட்டு தனது தாயையும் துப்பாக்கிக்கு இரையாக்கித் தானும் மாண்டான் என்ற தகவல்கள் வெளியாகி உலகமே அதிர்ச்சிக்கு ஆளானது.

இச்சம்பவம் நடந்து ஒருவாரத்துக்கு உள்ளாக மெக்சிக்கோவில் ஒரு துப்பாக்கிதாரி பதினேழு பேர்களைச் சுட்டுக் கொன்றதாக செய்திகள் வெளியாயின.

இப்பொழுது அமெரிக்காவில் பாடசாலை ஆசிரியர்களுக்கு துப்பாக்கி வழங்கி சுடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் பத்திரிகைகளில் படங்களுடனான தகவல்கள் பரப்பப்பட்டு வருகிறது.

'வாளெடுத்தவன் வாளாலே சாவானென்ற' முதுமொழிக்கேற்ப துப்பாக்கி தூக்கியவன் துப்பாக்கியால் சாக கனநேரமே எடுக்கும் சொல்லுங்க பாப்பம்...

# சவுதியில் இலங்கையர் நான்கு பேர் மரண தண்டனையை எதிர்கொள்ளும் அபாயம்

## ரஞ்சன் ராமநாயக்க



(கொழும்பு)

சவுதி அரேபிய சிறைச்சாலைகளில் இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் மரண தண்டனையை எதிர்கொள்ளக் கூடிய அபாயம் உள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். அவர்கள் மீது இப்போது மதரீதியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அது ரிசானாவைப் போலவே மரண தண்டனைக்கு வழி வகுக்கக் கூடும் என அவர்களின் பெற்றோர்கள் அஞ்சுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல திரைப்பட நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க கூறுகிறார்.

புத்தர் சிலையை வைத்து தொழுதார் என்று ஒருவரும், பைபிளை வைத்திருந்ததாக மற்றொருவரும் சவுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார்.

முகமது நபிகள் குறித்த கேலிச் சித்திரத்தை பேஸ்புக்கில் பெற்றதான குற்றச்சாட்டில் மற்றொருவரும், மந்திரம் ஓதி மணிக்கட்டில் கட்டும் கயிறை வாங்கியதாக ஒரு பெண்மணியும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து 18 இலட்சம் பேர், வெளிநாட்டில், அதிலும் குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளில் பணிப் பெண்களாக வேலை பார்த்து அனுப்பும் பணமே இப்போது நாட்டுக்கு பெரும் வருவாயாக உள்ளது என்றும், அதன் காரணமாகவே அரசு இந்த விஷயத்தில் கவலை கொள்வதில்லை என வும் அவர் கூறுகிறார்.

வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள் மூலம் இலங்கைக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் ஆறு பில்லியன் டொலர்களை, பத்து பில்லியன் டொலர்களாக உயர்த்த ஜனாதிபதி பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார் என்வும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை ஒரு ஏழை நாடு என்பதாலும் பலர் வறுமை காரணமாக வெளிநாட்டு பணிப் பெண்கள் வேலையை எதிர்பார்ப்பதாலும், சவுதி அரேபியா இலங்கையை மதிப்பதில்லை எனவும் ரஞ்சன் ராமநாயக்க கூறுகிறார்.

சவுதியில் வீட்டு வேலைக்கு பெண்களை அனுப்புவதில்லை என்று முடிவெடுத்த இந்தோனேஷிய ஜனாதிபதி போன்று முடிவெடுக்க இலங்கை ஜனாதிபதியால் முடியாது எனவும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (A/L) Examination model Paper

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

### இரசாயனவியல்

**01)** (a) அணுவெண் 30 இலும் குறைந்த M என்ற மூலகம் தரைநிலை இலத்திரன் நிலையமைப்பில் அதிகூடிய சோடியற்ற இலத்திரன்களைக் கொண்டுள்ளது.

1) M யாதாகும்? ..........................................

2) M இன் இலத்திரன் நிலையமைப்பை $IS^2 2S^2$ .... வடிவில் தருக. ..........................................

3) M இன் உறுதியான ஒட்சியேற்ற நிலைகள் எவை? ..........................................

4) M இன் உயர் ஒட்சியேற்ற நிலையிலுள்ள ஒட்சைட்டின் சூத்திரத்தையும் நிறத்தையும் தருக. ..........................................

5) M இன் பயன்கள் 3 தருக ..........................................

b) சில VSEPR குறியீடுகள் தரப்பட்டுள்ளன. தரப்பட்ட அட்டவணையில் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமானவற்றை எழுதுக.

| VSEPR | மூலகம் A யின் ஆவர்த்தனம் | A ஐச் சுற்றி இலத்திரன் தள்ளுகை அலகுகள் | மூலகம்A யின் உண்மையான குறியீடு | A யின் அணு வெண் | A யின் ஓபிற்றல் கலப்பு | மூலக் கூறின் வடிவம் | A யைச் சுற்றியுள்ள ஓபிற்றல் அமைவு |
|---|---|---|---|---|---|---|---|
| $AX_4E_0$ | 2 | | .............. | | .............. | .............. | .............. |
| $AX_4E_1$ | 3 | | .............. | | | .............. | .............. |
| $AX_4E_2$ | 5 | .............. | .............. | .............. | | .............. | .............. |

c) 2 mol $dm^{-3}$, 10$cm^3$ $XO_4^{m-}$ அயன் கார ஊடகத்தில் ($OH^-$) $Y_2O_4^{n-}$ அயனின் 3 mol $dm^{-3}$, 10 $cm^3$ உடன் முற்றாகத் தாக்கம் புரிந்து $XO_2$ சேர்வையையும் $YO_3^{n-}$ அயனையும் நீரையும் விளைவாகத் தந்தன. m,n இன் பெறுமானங்களைக் கணிக்க.

$$XO_4^{m-} + OH^- + Y_2O_4^{n-} \rightarrow XO_2 + YO_3^{n-} + H_2O$$

**02)** a) $Na_2CO_3$ யும் $SiO_2$ உம் கொண்ட திண்மக் கலவை $Na_2CO_3$ முற்றாகத் தாக்கமுறும் வரை வெப்பமேற்றப்பட்டது. $CO_2$ வாயு வெளியேறியதும் நிறைக்குறைவு 0.88 g ஆகவும் மீதித் திண்மத்தின் திணிவு 4.24 g ஆகவும் காணப்பட்டது.

$$Na_2CO_3 + SiO_2 \xrightarrow{\Delta} Na_2SiO_3 + CO_2$$

$Na_2CO_3$, $Na_2SiO_3$, $SiO_2$, $CO_2$ சார் மூலக்கூற்றுத் திணிவுகள் முறையே 106, 122, 60, 44 ஆகும்.

1) $CO_2$ இன் மூல் எண்ணிக்கையைக் கணிக்க.
..........................................

2) $Na_2CO_3$ மூல் எண்ணிக்கையைக் கணிக்க.
..........................................

3) $Na_2SiO_3$ இன் திணிவைக் கணிக்குக.
..........................................

4) தாக்கமுறாத $SiO_2$ மூல் எண்ணிக்கையைக் கணிக்க.
..........................................

5) ஆரம்பக் கலவையில் $Na_2CO_3$, $SiO_2$ மூல் விகிதம் யாதாகும்?
..........................................

b) 1) கீழே H - நிறமாலையின் காலல் நிறமாலைக் கோடுகள் கீறுவதற்குரிய பகுதி கீழே விடப்படுகின்றது. லைமன், பாமர், பசன் தொடர்க்கோடுகளில் அலை நீளம் கூடிய முதல் நான்கு கோடுகளையும் இங்கு வரைக.

←IR - பகுதி→ ←கட்புலப் பகுதி→ ←UV- பகுதி→

2) மூன்று தொடரிலும் கோடுகளுக்கிடையில் சம இடைவெளி இருப்பின் புள்ளிக்கோட்டால் நிழற்றிவிடுக.

3) சக்தி கூடிய காலலுக்குரிய கோட்டின் மீது x அடையாளமிடுக.

4) சிவப்பு நிறக் கோட்டின் மீது R என்று எழுதுக.

5) மேலே தரப்பட்ட வாயுக்களுக்கு பயன்படுத்தப்படும் சமன்பாடு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

**03.** a) 

```
     a    b   x    y   p   q
CD2 = C = CH - C = C - CCl3
```

மேலே மூலக்கூறு ஒன்று தரப்பட்டுள்ளது. இதிலுள்ள காபன்களுக்கு a,b,x,y,p,q எனும் குறியீடுகள் வேறுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம் மூலக்கூறினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) Sp ஓபிற்றல் கலப்புக்குட்பட்ட காபன்கள் எவை?
..........................................

2) $Sp^2$ ஓபிற்றல் கலப்புக்குட்பட்ட காபன்கள் எவை?
..........................................

3) $Sp^3$ ஓபிற்றல் கலப்புக்குட்பட்ட காபன் எது?
..........................................

4) நேர்கோட்டில் காணக்கூடிய C அணுக்கள் எத்தனை?
..........................................

5) ஒரே தளத்திலுள்ள அணுக்கள் எத்தனை?
..........................................

6) கீழே தரப்பட்டுள்ள பிணைப்பு உருவாக்கத்திற்கு மேற்பொருந்திய ஓபிற்றல்களை கீறிட்ட கோட்டில் தருக.

1. C - D ........................ 2) C - H ........................
3) C - Cl ........................ 4) $C^x$ - $C^y$ ........................
5) $C^p$ - $C^q$ ........................

b)

1) ஒரு சோதனைச் சேர்வை XI C, N, N ஐக் கொண்டது. வெப்பமேற்றும்போது வெளியேறும் $CO_2$, $H_2O$, நைதரசனின் ஒட்சைட்டுக்கள் போன்றவற்றை வெப்பமாக்கப்பட்ட Cu வலைக்கூடாகச் செலுத்திப் பெறப்பட்ட $N_2$ உடன் $CO_2$, $H_2O$, $N_2$ திணிவு விகிதம் 44:27:7 ஆகக் காணப்பட்டது. இச் சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கணிக்க.


2) X - இனை மூலக்கூற்றுச் சூத்திரமுடைய A,B சேர்வைகள் சமச்சீரற்ற காபனைக் கொண்டிருக்கவில்லை. அவை $NaNO_2$ / HCl உடன் $C_2H_5O$ அனுபவ சூத்திரமுடைய முறையே C, D சேர்வைகளைக் கொடுக்கின்றன. C இனது கொதிநிலை , D இன் கொதிநிலை > A,B, C,D இனது கட்டமைப்புச் சூத்திரங்களைத் தருக.

c) ஒரு இலட்சியக் கரைசல் A, B எனும் திரவங்களினால் ஆனது $P_B^o > P_A^o$ இங்கு $P_A^o$, $P_B^o$, $P_T$, $P_A$ என்பன முறையே தூய A, தூய B, திரவக்கலவை, திரவம் A ஆகியவற்றின் ஆவிகளால் வழங்கப்படும் ஆவியமுக்கங்களாகும்.

1) $X_A$, $P_A$, $P_A^o$ ஆகியவற்றிடையே சமன்பாடு ஒன்று தருக.

2) $P_T = P_B^o + X_A (P_A^o - P_B^o)$ எனும் சமன்பாட்டினைப் பெறுக.


3)





2, 4 ஆம் வினாக்களுக்கு சமன்பாடுகளுக்குரிய வரைபுகளை வரைக.

4) $X_A$ என்பதை ஆவிநிலை மூலப்பின்னமாகக் கருதி அதே வரைபில் ஆவி அமுக்கம் எதிர் $X_A$ வரைபை புள்ளிக்கோட்டால் வரைக.

5) A, B இனால் கொதிநிலை எதிர்மூல்ப்பின்ன அமைப்பு வரைபை வரைந்து திரவம், ஆவி, திரவம் - ஆவி $T_A^o$, $T_B^o$ ஆகியவற்றைக் குறித்துக் காட்டுக.




d) A,B, C,D எனும் மூலகங்கள் $A_2$, $B_2$, $C_2$, $D_2$ மூலக்கூறுகளை சுயாதின நிலையில் உருவாக்குகின்றன. வெப்பநிலை TK இல் இவற்றிற்குரிய $\frac{PV}{nRT}$ எதிர் P வரைபுகள் வரையப்பட்டுள்ளன.




1) இவ் வாயு மூலக்கூறுகளில் TK இல் கூடிய அமுக்க வீச்சுக்கு இலட்சிய வாயு நடத்தையை எவ்வாறு காண்பிக்கின்றது?

2) இவற்றில் எவ்வாயுவின் கொதிநிலை குறைந்த பெறுமானமுடையது?

3) TK இல் கூடிய இடைக்கவர்ச்சி விசையுடைய வாயு எதுவாகும்?

4) X இனை மூலக்கூற்றுச் சூத்திரமாகவுடைய சேர்வை E, $NaNO_2$, HCl உடன் உருவாக்கும் விளைவு பிராடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் வீழ்படிவைக் கொடுக்குமாயின் E இனது கட்டமைப்புச் சூத்திரத்தைத் தருக.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

1.1 பொது

உள்ளே வரும் குறிப்புகளில் ஆவர்த்தனத்தின் வழியே, தொகுதியின் வழியே என்ற சொற்றொடர்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஆவர்த்தனத்தின் வழியே என்பது ஒரு ஆவர்த்தனத்தில் இடம் இருந்து வலமாக ஒழுங்காக அவதானித்தல் என்பதாகும். ஒரு தொகுதியின் வழியே என்பது, தொகுதியில் மேல் இருந்து கீழே ஒழுங்காக வரும்போது என்பதாகும்.

1.2 இலத்திரன் நிலையமைப்பு

மூலகங்களின் இலத்திரன் நிலையமைப்பு அணு எண் வரிசையில் அவற்றிற்கு முன்னால் வரும் சடத்துவ வாயுக்களின் சார்பாக தரப்படுகிறது. உதாரணமாக:

சோடியம் அணுவின் இலத்திரன் நிலையமைப்பு
1. Na ; $1s^2$, $2S^6$ $2P^2$, $3S^1$ ஆகும்.

நேயன் அணுவின் இலத்திரன் நிலையமைப்பு
2. Ne; $1s^2$, $2S^2$ $2P^6$ ஆகும்

சோடியம் அணுவின் இலத்திரன் நிலையமைப்பை சுருக்கமாக
3. (Ne), 3S1 என்று தரப்பட்டுள்ளது.

பரீட்சைகளில் அணு எண் தந்து இலத்திரன் நிலையமைப்பு எழுதச் சொன்னால் முறை I இன் படியே எழுதுக.

மூலத்துவ வாயுக்களின் இலத்திரன் நிலையமைப்புக்கள் பின்வருமாறு

1) He; $1s^2$
2) Ne; $1s^2$, $2s^2$ $2p^6$
3) Ar; $1s^2$, $2s^2$ $2p^6$, $3s^2$ $3p^6$
4) Kr; $1s^2$, $2s^2$ $2p^6$, $3s^2$ $3p^6$ $3d^{10}$ $4s^2$ $4p^6$
5) Xe; $1s^2$, $2s^2$ $2p^6$, $3s^2$ $3p^6$ $3d^{10}$, $4s^2$ $4p^6$ $4d^{10}$, $5s^2$ $5d^6$
6) Rn; $1s^2$, $2s^2$ $2p^6$, $3s^2$ $3p^6$ $3d^{10}$, $4s^2$ $4p^6$ $4d^{10}$ $4f^{14}$, $5s^2$ $5p^6$ $5d^{10}$, $6s^2$ $6p^6$

1.3 மூலவியல்பு

மூலவியல்பு என்பதனால் மேல்வாரியாக நாம் விளங்கிக் கொள்வது உலோகவியல்பாகும். உலோகங்களின் ஒட்சைட்டுக்களும் ஐதரொட்சைட்டுகளும் மூலகங்களாக தொழிற்படக்கூடிய ஆற்றலை மூலவியல்பு என்போம். அதாவது, இவை அமிலங்களுடன் தாக்கமுற்று உப்புக்களையும் நீரையும் தரக்கூடிய ஆற்றல் ஆகும்.

1.4 ஒட்சியேற்ற நிலை அல்லது ஒட்சியேற்ற எண்

அணுக்கள் இணைந்து மூலக்கூறுகள் உண்டாகும்போது நிகழும் இலத்திரன் பெயர்வுகளை எளிதாக எடுத்துக்காட்ட ஒட்சியேற்ற எண் அல்லது ஒட்சியேற்ற நிலை என்ற கருத்துப் படிவம் உபயோகப்படுகிறது.

பின்வரும் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கமைய இலத்திரன்களை எண்ணுவதால், ஒரு அணுபெற்றிருப்பதாகக் கருதக்கூடிய தோற்ற ஏற்றத்தின் அளவு அவ்வணுவின் ஒட்சியேற்ற நிலை அல்லது ஒட்சியேற்ற எண் எனப்படும்.

**இவ்விதிகளாவன:**


1) இரு ஒவ்வா அணுக்கள் இணையும்போது பங்குபற்றும் இலத்திரன்கள், கூடிய மின் எதிர்மை உள்ள மூலகத்தின் அணுவுடன் எண்ணப்படும்.

2) ஒத்த அணுக்கள் இரண்டு இணையும்போது பங்குபற்றும் இலத்திரன்கள் சமமாக பங்கிடு செய்யப்பட்டு ஒவ்வொரு அணுவுடனும் எண்ணப்படுகின்றது.

உ-ம் : $H_2$ மூலக்கூறின் ஐதரசனின் ஒட்சியேற்ற எண்
ஐதரசன் மூலக்கூறில் இரண்டு அணுக்களுக்கிடையில் இரண்டு

இலத்திரன்கள் பங்காக வைக்கப்பட்டிருக்கும் [H ×· H] இவை இரண்டும் ஒத்த அணுக்கள். பங்காக வைத்திருக்கும் இவ்வாறு இந்த இலத்திரன்களில் ஒவ்வொன்று ஒரு ஐதரசனுடன் எண்ணப்படுவதால் ஐதரசனில் உள்ள அமைப்பு சாதாரண ஐதரசன் அணுவினுடையதாக தோன்றும். அதாவது ஐதரசன் அணுவில் உள்ள தோற்ற ஏற்றம் O ஆகும்.

உ-ம் 2 நீரில் உள்ள ஐதரசன் ஒட்சிசன் அணுக்களின் ஒட்சியேற்ற எண்கள்.



இங்கே பங்காக வைத்திருக்கும் நான்கு இலத்திரன்களில் இரண்டு ஒட்சிசனுக்கு உரியது. இரண்டு ஐதரசனுக்கு உரியது.இவை இரண்டும் மின் எதிர் மூலகமாகிய ஒட்சிசனுடன் எண்ணப்படுவதால் ஒட்சிசன் அணு - 2 என்ற தோற்ற ஏற்றத்தை உடையதாகிறது. ஆகவே ஒட்சிசனின் ஒட்சியேற்ற எண் - 2 ஆகும். ஐதரசன் அணுவில் இருந்த ஒரு இலத்திரன் ஒட்சிசனுடன் எண்ணப்படுவதால் ஐதரசனில் ஒரு நேர் ஏற்றம் உண்டாகும். ஆகவே ஐதரசனின் ஒட்சியேற்ற நிலை + 1 ஆகும்.

சேர்வைகளில் ஒட்சியேற்ற எண்களை கணிப்பதற்கு மேலே விபரித்த முறையில் கணிக்கப்பட்ட பின்வரும் நடைமுறை விதிகளை பயன்படுத்தலாம்.

1) சுயாதீனமான மூலகத்தின் அணுவின் ஒட்சியேற்ற எண் O ஆகும்.
உ-ம் : $H_2$, $S_8$, $P_4$ ஆகியவற்றின் ஒட்சியேற்ற எண் 0.

2) எளிள அயன்களில் (தனி அணுக்களைக் கொண்டவை) ஒட்சியேற்ற எண், அவ்வணுவில் உள்ள ஏற்றத்திற்கு சமமாகும். இச்சந்தர்ப்பத்தில் தோற்ற ஏற்றம் அயனில் உள்ள உண்மை ஏற்றத்திற்கு சமம் என்பதை அவதானிக்கவும்,
உதாரணம் : $Al^{+3}$ இன் ஒட்சியேற்ற எண; + 3, $O^{2-}$ இல் ஒட்சிசன் அணுவின் ஒட்சியேற்ற எண் - 2 ஆகும்.

3) அநேகமான ஒட்சிசன் சேர்வைகளில் ஒட்சிசன் அணுவின் ஒட்சியேற்ற எண் - 2 ஆகும்.
பரவொட்சைட்டுக்களில் ஒட்சிசனின் ஒட்சியேற்ற எண் - 1
ஒட்சிசன் புளோறைட்டில் $OF_2$
ஒட்சிசனின் ஒட்சியேற்ற எண் + 2 ஆகும்.

4) அநேகமான ஐதரசன் சேர்வைகளில் ஐதரசன் அணுவின் ஒட்சியேற்ற எண் + 1
உலோக ஐதரைட்டுகளில் ஐதரசனின் ஒட்சியேற்ற எண் -1
உ-ம் : NaH

5) a) நடுநிலை மூலக்கூறுகளில் எல்லா அணுக்களினதும் ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத்தொகை பூச்சியம் ஆகும்.
b) சிக்கல் அயன்களின் (ஒன்றுக்கு மேற்பட்ட அணுக்களை உடைய அயன்கள்) அணுக்களின் ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத்தொகை அயனில் உள்ள ஏற்றத்திற்கு சமமாகும்.

உதாரணம்:

$Cr_2O_7^{2-}$ { Cr இன் ஒட்சியேற்ற எண் + 6 ; O இன் ஒட்சியேற்ற எண் − 2 }

$Cr_2O_7^{-2}$ ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத்தொகை

$$(+6)\times 2 + 7\times {}^{-}2$$
$$= 12 + {}^{-}14$$
$$= {}^{-}2$$

அயனில் உள்ள ஏற்றம் $= {}^{-}2$

உ-ம் : பின்வரும் சேர்வைகளில் மங்கனீசின் ஒட்சியேற்ற எண்ணைக் கணிக்கவும்

(i) $KMnO_4$ (ii) $MnO_4^{2-}$

(i) Mn இன் ஒட்சியேற்ற என் X என்க $KMnO_4$ இல் உள்ள ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத்தொகை

$$= 1 + X + 4 \times {}^{-}2 = 1 + X - 8$$
$$= X - 7$$

இக்கூட்டுத் தொகை மூலக்கூறுகளில் பூச்சியமாகும்

$$\therefore X - 7 = 0$$
$$\therefore X = 7$$

(ii) Mn இன் ஒட்சியேற்ற என் X என்க
$MnO_4^{2-}$ இன் ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத்தொகை

$$= X + 4 \times {}^{-}2$$
$$= X - 8$$

ஆனால் அயன்களில் ஒட்சியேற்ற எண்களின் கூட்டுத் தொகை = அயனில் உள்ள ஏற்றம்

$$X - 8 = {}^{-}2$$
$$X = {}^{-}2 + 8 = {}^{+}6$$

(தொடரும்...)

# போர் நிறுத்தத்தை மீறிய பாகிஸ்தான்

## மௌனம் காக்கும் இந்தியா?



பாகிஸ்தான் இராணுவம், கடந்த 2012ஆம் ஆண்டு மட்டும் 117 முறை போர் நிறுத்த உடன்பாட்டை மீறி நடந்துள்ளது.

ஆனால் இந்தியாவோ பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைகள் குறித்து பெரிய அளவில் அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

இந்தியா, பாகிஸ்தான் இடையே 55 ஆண்டு காலமாக மோதல் நிலவி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே 3 பெரிய போர்கள் நடந்து விட்டன. கார்கிலில் கடைசியாக நடந்த மோதலை உலகமே பயத்துடன் பார்த்தது.

அதன் பின்னர் இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை இந்தியா மதித்து நடந்து வருகிறது. ஆனால் பாகிஸ்தான்தான் அதை மீறியே வருகிறது.


கடந்த 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்பாட்டை இதுவரை பாகிஸ்தான் மதித்ததே கிடையாது. அன்று முதல் தொடர்ந்து போர்நிறுத்தத்தை மீறியே வருகிறது.

இந்தியாவும் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து வருகிறது.

தற்போது இந்தியப் பகுதிக்குள்ளேயே புகுந்து 2 இராணுவ வீரர்களைக் கோரமான முறையில் பாகிஸ்தான் இராணுவம் கொன்றுள்ள செயல், இந்திய இராணுவத்தினரை கடும் கோபத்திற்குள்ளாக்கியுள்ளது.

இந்தியச் செய்திகள்

# சிறுமியை பலாத்காரம் புரிந்துவிட்டு உயிருடன் எரித்த பாதகன்



உத்திர பிரதேச மாநிலம் பரிதாபாத்தில் வீட்டில் தனியாக இருந்த 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, பின்னர் மண்ணெண்ணை ஊற்றி எரிக்கப்பட்டுள்ளார். தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற இளைஞரை அச்சிறுமி பலமுறை அடித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர் அச்சிறுமியை தீ வைத்து எரித்துள்ளார்.

சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் அச்சிறுமியை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள அச்சிறுமியின் தந்தை அளித்த முறைப்பாட்டில் இளைஞரின் மாமாவை கைது செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# பாலியல் கொடுமையிலிருந்து தப்பிக்க "அண்ணா" என்று அழையுங்கள்

## கர்நாடக அமைச்சர்



(புதுடில்லி)

ஆண்களுடன் சகோதர பாசத்தோடு பழகினால் பெண்களுக்கு பாதிப்புகள் ஏதும் வராது என கர்நாடக உயர் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மரணமடைந்தது, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதனையடுத்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், கர்நாடகாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் சி.டி.ரவி பெண்களின் பாதுகாப்பிற்காக 12 அம்சத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இதில், கல்லூரிகளில் படிக்கும் பெண்கள், ஆசிரியைகள் பாதுகாப்பிற்காக சகோதரத்துவத்தை வலியுறுத்த வேண்டும். இதற்காக விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பாடசாலை, கல் லூரிகளில் தொடர் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இன்றைக்கு பல இடங்களில் பெற்ற தகப்பனே பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்வதும், உடன்பிறந்த சகோதரனே வன்கொடுமை செய்வதும் அதிகரித்து வரும் நிலையில், இந்த அமைச்சர் சொல்வதைப் போல யாரோ ஒருவனை அண்ணா என்று அழைத்தால் அவர்கள் சகோதர பாசத்தோடு அணுகுவார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

அசரம்பாபு என்ற சாமியார் கூறியது போன்றும், இந்த அமைச்சர் கூறியது போன்றும் அண்ணா என்று அழைத்தாலும் பெண்களை உடல்ரீதியாக சீரழிக்க நினைக்கும் கயவர்களின் எண்ணம் என்றைக்கும் மாறப்போவதில்லை என்பதே உண்மை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.




# யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்

## அறிவித்தல்

### எமது சங்கத்தின் 2013ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் விபரம்

| | |
|---|---|
| 01. திரு. வீ. ராஜ்குமார் | - தலைவர் |
| 02. திரு. மு. தர்மகுலராசா | - உபதலைவர் |
| 03. திரு. செ. யோகநாதன் | - செயலாளர் |
| 04. திரு. சி. சிறீதரன் | - உப செயலாளர் |
| 05. திரு. பா. றஞ்சித்குமார் | - பொருளாளர் |
| 06. திரு. சி. அன்ரன்லோறன்ஸ் | - நிர்வாக உறுப்பினர் |
| 07. திரு. ப. யூட்ஜெயக்குமார் | - நிர்வாக உறுப்பினர் |
| 08. திரு. த. சுகந்தன் | - நிர்வாக உறுப்பினர் |
| 09. திரு. செ. ஜெயசீலன் | - நிர்வாக உறுப்பினர் |
| 10. திரு. மா. சிவசுப்பிரமணியம் | - போசகர் |

## வேண்டுகோள்

வாடகைச் சேவையிலீடுபடும் ஓட்டோக்கள் எமது தலைமைச் சங்கத்திலோ அல்லது தமது பகுதிகளுக்குரிய கிளைச்சங்கங்களிலோ ஓட்டோவிற்குரிய ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் இவற்றின் பிரதிகளை ஒன்று சமர்ப்பித்து பதிவு செய்து சேவையில் ஈடுபட வேண்டும்.

தலைமைச்சங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அங்கத்துவ அடையாள அட்டையை உடன் வைத்திருத்தல் வேண்டும்.

ஓட்டோக்களுக்குரிய தரிப்பிடக் குறியீடுகளை ஓட்டோவில் பொறித்திருத்தல் வேண்டும்.

மாதாந்த சந்தாப் பணம் செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தரிப்பிடங்களில் அமைதியும், கட்டுப்பாடுகளையும் அனுசரித்து தரிப்பிடங்களையும் அசிங்கப்படுத்தாதிருத்தல் வேண்டும்.

ஓட்டோ சேவையின் போது சாரதிகள் கட்டைக் காற்சட்டை அணியாது, அநாகரிக ஆடைகள் அணியாது தூய உடையணிந்து புனிதமாயிருத்தல் வேண்டும்.

ஓட்டோ சேவையின் போது மது அருந்திய நிலையில் சேவையில் ஈடுபட்டு, விபத்துக்கள், விபரீதங்களை உருவாக்கி பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும், ஏனைய போக்குவரத்துச் சாதனங்களுக்கும் அச்சுறுத்தலாக சேவையிலீடுபடாதிருத்தல் வேண்டும்.

மது அருந்திய நிலையில் ஓட்டோ தரிப்பிடங்களுக்கும் சமுகமளித்தல் ஆகாது.

ஓட்டோ சேவையின் போது சாரதிகள் புகைத்தல், வெற்றிலை போடுதல் என்பவற்றாலும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும்.

எனவே சேவையின் போதோ, தரிப்பிடங்களிலோ புகைத்தல், வெற்றிலை போட்டு உமிழ் நீரை தரிப்பிடங்களில் துப்புதல் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

ஓட்டோ சேவைகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்க வேண்டும். தரிப்பிடப் பொறுப்பாளருடன் அணுகலாம். அல்லது அவரூடாக சங்கத்துடன் தொடர்பு கொண்டு தீர்வு காணலாம். இதை விடுத்து வாக்குவாதங்களை ஏற்படுத்துதலும், கைகலப்பில் ஈடுபடுவதையும் தவிர்த்தல் வேண்டும்.

பயணிகளிடம் கட்டண அறவீட்டில் கண்ணியமாக நடந்து பயணிக்கு சுகமான பயணத்திற்கு தாங்கள் உதவவேண்டும்.

சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு தாங்களும், தங்கள் ஓட்டோ சேவையும் துணை போகலாகாது.

மேற்காட்டப்பட்டுள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளாது கண்டவாறு, கட்டுப்பாடின்றி ஓட்டோ சேவையிலீடுபட்டு, சாரதிய, போக்குவரத்து விதிமுறைகளை மீறி செயல்பட்டு தங்கள் ஓட்டோ தொழிலுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தாது, பிறருடைய விமர்சனங்களுக்கும் ஆட்படாது உயிரைக்காவு கொள்ளும் விபத்துக்களைத் தவிர்த்து நாமும் பாதுகாக்கப்பட்டு இச்சேவையின் மூலம் நற்பெயரும் நற்பயனும் அடைவோமாக.

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்.

(C/2286)

# பாகிஸ்தானில் கோர குண்டுவெடிப்பு;

# 115பேர் பலி, 200பேர் படுகாயம்






பாகிஸ்தானில் தொடர்ச்சியாக நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களில் 115 பேர் கொல்லப்பட்டனர், 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

குவெட்டாவை தலைநகராகக் கொண்ட தென் மேற்கு பலுசிஸ்தான் மாகாணத்தில் தொடர்ந்து வன்முறைகளும், பயங்கரவாதத் தாக்குதல்களும் தலைவிரித்தாடி வருகின்றன.

இங்கு தான் ஷியா முஸ்லிம்கள் அதிக அளவில் வசிக்கிறார்கள் என்பதால், தொடர்ந்து சன்னி முஸ்லிம்கள் இந்தப் பகுதியைக் குறி வைத்துத் தாக்கி வருகின்றனர்.

இங்கு வசிக்கும் ஷியா பிரிவினர் பெரும்பாலும் ஆப்கானிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள பில்லியர்ஸ் அரங்கொன்றில் நடந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் 85 பேர் வரை கொல்லப்பட்டனர், இதனால் அப்பகுதியே போர்க்களம் போன்று காட்சியளித்தது.

இறந்தவர்களின் உடல்கள் சிதறிக் கிடந்தன, காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்றனர், ஆனால் மருத்துவமனைகளில் இடமில்லாமல் அவை நிரம்பி வழிந்தன.

குவெட்டா தவிர மிங்கோரா என்ற இடத்தில் நடந்த இன்னொரு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர். பாகிஸ்தானில் மொத்தம் 4 இடங்களில் குண்டுவெடிப்புகள் நடந்துள்ளன.

# மனித மாமிசத்தை விற்றவனுக்கு சீனாவில் மரண தண்டனை



சீனாவில் 11 பேரை கொடூரமாக கொலை செய்து, மாமிசத்தை விற்றவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தெற்கு சீனாவின் யுன்னான் மாகாணத்தை சேர்ந்தவன் ஷய்யாங்மிங் (வயது 57).


இவன் தொடர்ச்சியாக பல்வேறு நபர்களை கொலை செய்து, அவர்களின் உடலை வெட்டி மாமிசத்தை நாய்களுக்கு இரையாக போட்டுள்ளான்.

இதற்கும் மேலாக, கொலை செய்த நபர்களின் மாமிசத்தை நெருப்பு கோழி என ஏமாற்றி விற்றும் பணம் சம்பாதித்து வந்துள்ளான்.

இது போன்று 11 பேரை கொலை செய்த ஹய்யாங்மிங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர், பின்னர் இவன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, இதனை தொடர்ந்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

# எந்நேரத்திலும் போர் ஏற்படலாம்? ஆயுதங்களை வாங்கும் ஜப்பான்



சர்ச்சைக்குரிய கிழக்கு சீன கடற்பகுதியில் உள்ள தீவுகள் தங்களுக்கு தான் சொந்தமென கூறி ஜப்பானும், சீனாவும் அடிக்கடி மோதிக் கொள்கின்றன.

இதனால் இவ்விரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் உள்ளது.

இதற்காக ஜப்பான் இராணுவம் போர் பயிற்சியை அதிகப்படுத்தி உள்ளது. மேலும் ஆயுதங்களை அதிகளவில் தயாரிப்பதுடன், வெளிநாடுகளிலிருந்து வாங்கி குவிக்க ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக போர் விமானங்கள், ஏவுகணை தயாரிப்பில் அதிக கவனம் செலுத்திவருகிறது.

இதற்காக இராணுவத்துக்கு அதிக நிதியும் ஒதுக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் அடுத்த பட்ஜெட்டில் இன்னும் அதிகளவு நிதி வேண்டும் என்று இராணுவ துறை அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

# 2019 இல் அமெரிக்காவை மிஞ்சப் போகும் சீனா!



உலக அளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடாக சீனா உள்ளது. அந்த நாட்டின் வளர்ச்சி பற்றி உலக பொருளாதார நிபுணர்கள் கணிப்பு ஒன்றை வெளியிட்டு உள்ளனர். அதில் "சீனாவின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து நீடிக்கும். இதில் பின்னடைவு ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே பொருளாதார வலிமையில் சீனா 2019ஆம் ஆண்டில் அமெரிக்காவை முந்திவிடும். இந்த வளர்ச்சி 30 ஆண்டுகள் வரை நீடிக்கலாம். எனவே அடுத்த 30 ஆண்டுகளுக்கு சீனா முதன்மை நாடாக திகழும்" என்று கூறியுள்ளனர். மேலும் நாட்டின் சுகாதார வளர்ச்சியிலும் சீனா முதன்மை நாடாக திகழும் என்று அவர்கள் தெரிவித்து உள்ளனர்.தற்போது சீனா சுகாதார வளர்ச்சியில் 11ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரேசில் உலக கால்பந்து போட்டிக்கு தயாராகும் பாலியல் தொழிலாளர்கள்





பிரேசிலில் 2014 உலக கால்பந்து போட்டியின் போது, வாடிக்கையாளர்களை கவர்வதற்காக பாலியல் தொழிலாளிகள் இப்போதே தயாராகி வருகின்றனர். வாடிக்கையாளர்களுடன் சரளமாக பேசுவதற்காக பல மொழிகளை கற்று வருகின்றனர். உலக கால்பந்து போட்டி மிகவும் பிரபலமானது. கடந்த 1950ஆம் ஆண்டு பிரேசில் இந்த போட்டியை நடத்தியது. அதன்பின், வரும் 2014 ஆம் ஆண்டு 2ஆவது முறையாக இப்போட்டியை நடத்துகிறது. இந்த போட்டி 2014 ஜுன் 12ஆம் திகதி தொடங்கி, ஜுலை 13ஆம் திகதி முடிகிறது.

இந்த போட்டியைக் காண உலகின் பல நாடுகளைச் சேர்ந்த கால்பந்து இரசிகர்கள் பிரேசிலுக்கு வருவார்கள். அப்போது, பாலியல் தொழிலும் பரபரப்பாக நடக்கும். இந்நிலையில், வாடிக்கையாளர்களை கவர பிரேசிலின் பெலோ ஹாரிசோன்டி நகர பாலியல் தொழிலாளிகள் பல மொழிகளை இப்போதே கற்க தொடங்கி உள்ளனர். இதுகுறித்து பாலியல் தொழிலாளிகள் சங்க தலைவர் சிடா வியிரா கூறுகையில், பிரேசிலில் நடக்கும் கால்பந்தாட்ட போட்டியின் போது வாடிக்கையாளர்களுடன் அவர்கள் மொழியில் பாலியல் தொழிலாளிகள் சரளமாக பேச இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வாடிக்கையாளர்களுடன் நியாயமான ரேட் நிர்ணயித்து கொள்ளவும், தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் பாலியல் தொழிலாளிகளால் முடியும் என்றார்.

அதன்படி பாலியல் தொழிலில் ஈடுபடும் இளம்பெண்களுக்கு ஸ்பானிஷ், ஆங்கிலம், போர்ச்சுகீஸ் உள்பட பல மொழிகள் இலவசமாக கற்றுத் தரப்படுகின்றன. இந்த மொழி வகுப்பில். 300இற்கும் மேற்பட்ட பெணகள் இப்போதைக்குச் சேர்ந்து பல மொழிகளை ஆர்வமாக கற்று வருகின்றனர்.

# போதை மாத்திரைகள் கடத்தல்; சிரிய பிரஜைக்கு தலை துண்டிப்பு



சவுதி அரேபியாவில் போதை மாத்திரைகளைக் கடத்திய சிரியப் பிரஜையொருவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தலையை வெட்டி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மொஹமட்டர்விஷ் என்ற நபர் போதை மாத்திரைகளை கடத்தி வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து கைது செய்யப்பட்டார்.

இதற்குரிய நீதிமன்ற தீர்ப்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து சவுதி அரேபியாவின் வட பகுதி மாகாணமான அல் ஜாப்பில் அவரது தலையை வெட்டி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடம் அந்நாட்டில் 76 பேருக்கு தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள்

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த புதன்கிழமையும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய நடவடிக்கையில் இக்கடற்பரப்பில் அன்றாடம் தொழில் செய்து வரும் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வடக்கு கடற்பரப்புக்குள் வரும் இந்திய இழுவைப் படகுகள் முல்லைத்தீவு மீனவர்களின் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமது தொழில் பாதிப்படைவதுடன் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாகூ மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும், எமது வாழ்வாதாரப் பிரச்சினையை நாம் யாரிடம் தெரிவிப்பது என முல்லைத்தீவு மீனவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (04)

# தபால் திணைக்களத்துக்கு வடக்கில் குவியும் வருமானம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அஞ்சல் திணைக்களம் 10,355 மில்லியன் ரூபா வருமானத்தினை கடந்த வருடத்தில் ஈட்டியுள்ளதாக வட மாகாண அஞ்சல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2012 ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் அஞ்சல் திணைக்களம் தனது சேவையினை விஸ்தரித்த நிலையில், மின்பட்டியல் கட்டணமாக 604 மில்லியன் ரூபாவும் வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் 12 மில்லியன் ரூபாவும் காசுக்கட்டளையின் மூலம் 6 மில்லியன் ரூபாவினையும் துரித தபால் சேவையின் மூலம் 22 மில்லியன் ரூபாவினையும் முத்திரை விற்பனையின் மூலம் 391 மில்லியன் ரூபா வருமானத்தினையும் பெற்றுள்ளதாக வட மாகாண அஞ்சல் திணைக்களத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (25)

# முதலாவது ஒரு நாள் போட்டி இங்கிலாந்து அணி வெற்றி

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் நேற்றைய முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ராஜ்கொட்டில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் 85 அலஸ்ரெயர் குக் 75, சமித் பட்டேல் 44 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 44, மோர்கன் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக அஷோக் டின்டா 2, சுரேஷ் ரெய்னா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

326 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக அவ்வணி 96 ஓட்டங்களைப் பெற்ற போதிலும், முதல் 3 விக்கெட்டுக்களும் குறுகிய ஓட்ட இடைவெளியில் வீழ்த்தப்பட்டன. இறுதிநேரத்தில் டோனி அதிரடியாக ஆடிய போதிலும், இந்திய அணியால் வெற்றிபெற முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக யுவராஜ் சிங் 61 கௌதம் கம்பீர் 52, சுரேஷ் ரெய்னா 50, அஜின்கியா ரஹானே 47 மகேந்திரசிங் டோனி 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ட்ரெட்வெல் 4, ரிம் பிரெஸ்னன், ஜேட் டேர்ண்பக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் பின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் ட்ரெட்வெல் தெரிவானார்.

# ஆனைப்பசிக்கு அரிசிப் பொதி வவுனியா விவசாயிகள் ஆதங்கம்

கடந்த சிறுபோக நெற்செய்கையின்போது வறட்சியால் பாதிப்புக்களை எதிர்நோக்கிய விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற ஏக்கருக்கு 2 புசல் நெல் போதுமானதாக இல்லையென வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாய சம்மேளனத்தின் செயலாளர் தெரிவிக்கையில்,

ஒருபோக நெற்செய்கைக்கு சுமார் 40 ஆயிரம்வரை செலவு செய்யப்படுகின்றது. கடந்த முறை வறட்சியால் விவசாயம் பாதிப்படைந்தபோது சுமார் 30 ஆயிரம் ரூபா வரையில் விவசாயிகள் பணத்தை செலவு செய்திருந்தனர். இந்நிலையில் இழப்பீடுகள் தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டபோது நாம் இத் தகவல்களை விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தோம். எனினும் தற்போது காலபோக செய்கை இடம்பெற்றுவரும் நிலையில் விவசாயிகள் பணத்தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

ஏக்கருக்கு 2 புசல் நெல் மாத்திரமே விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படுகின்றது. வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்திற்கு மாத்திரமே இந் நெல் வழங்கப்படுகின்றது.. ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் தென்பகுதியில் உழவுப்பணம் உட்பட சிலவற்றுக்கான செலவுத் தொகையை வழங்கப்படுவதாக அறிகின்றோம். இது தொடர்பில் நாம் வவுனியா மாவட்ட செயலரிடமும், மாவட்ட செயலகத்திலுள்ள விவசாயப் பணிப்பாளரிடமும் முறையிட்டுள்ளோம் என்றார்.

## அமெரிக்கா...

பட்ட தீர்மானம் குறித்து தாம் மிகவும் கவலையைடந்துள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்பு நடந்த ஒரு சில நிமிடங்களில் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் நீதித்துறைக்கும் அரசுக்கும் இடையே இருக்கும் அதிகாரப் பகிர்வு குறித்த கேள்விகளை இவ்விவகாரம் எழுப்பியுள்ளதாகக் கூறியுள்ளது.

அமைதிகரமான ஆர்பாட்டங்களை நடத்த அனைவருக்கும் இருக்கும் உரிமையை அனைத்துத் தரப்பினரும் மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள அமெரிக்கத் தூதரகம், அமைதியான முறையில் ஆர்பாட்டம் செய்வோரின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

இலங்கை அரசு சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் மதிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பிரதம...

நீதிமன்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் சட்டத்தரணிகள் தொடர்ந்ததினால் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களின் செயற்பாடுகளும் செயலிழந்து காணப்பட்டன.

இதேவேளை, பிரதம நீதியரசருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக நேற்றுமாலை ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராகவும் குற்றப்பிரேரணைக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்களால் விஜயராம மற்றும் பௌத்த லோக்க மாவத்தை மற்றும் நாடாளுமன்றத்திற்குச் செல்லும் வீதிகளில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

## பட்டதாரிகளுக்கு...

ரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கடந்த காலங்களில் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. பட்டதாரிகளை அவர்களின் மாவட்டங்களிலேயே நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மூன்று இனங்களையும் சேர்ந்த மூன்று பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சுகததாசவிளையாட்டரங்கில் நடைபெறும் விசேட நிகழ்வில் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கவுள்ளார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குடாநாட்டில்...

வெட்டி பிரதேசத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 571 பேரும், மருதங்கேணி பிரதேசத்தில் ஆயிரத்து 639 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 807 பேரும், சங்கானை பிரதேசத்தில் ஆயிரத்து 276 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 223 பேரும், கோப்பாய் பிரதேசத்தில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 219 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

## துயரமான...

மிகு தினமாக நேற்றைய நாளைக் கருதுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையே மீளவும் நேற்றையதினம சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்ட போது, வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு உரிய நியாயமான காரணங்களை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ முன்வைக்கத் தவறியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

## நடவடிக்கை...

துள்ளார். நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு சட்ட அந்தஸ்து கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படடுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர வேறு காரணிகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் • ஜனாதிபதி செயற்பட்டால் அது அரசியல் சாசனத்திற்கு முரணானதாகவே கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுநலவாய...

தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, மனித உரிமை விவகாரங்கள் குறித்து இலங்கையுடன் கனடா பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகளை எட்ட முடியும் என அவுஸ்ரேலியா பரிந்துரை செய்துள்ளது. நல்லிணக்க முனைப்புக்கள், குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை அடிப்படையாக அமையும் எனவும் அது தெரிவித்துள்ளது.

## பதவி பறிபோவது...

எதிரான தெரிவுக்குழு அறிக்கை மீதான வாக்கெடுப்பு தொடர்பாக நேற்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என எதிர்க்கட்சிகள் தெரிவித்ததையடுத்து, சபையில் சற்று பதற்ற நிலை ஏற்பட்டதையடுத்து, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் சபை அமர்வுகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன. சுமார் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சபை, நேற்றிரவு 7.40 மணிக்கு மீண்டும் ஆரம்பமானது. இதனையடுத்து பிரதம நீதியரசருக்கு எதிரான கண்டனப் பதவி நீக்கத் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 155 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிராக 49 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

குற்றப் பிரேரணைக்கு எதிரான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில், அமைச்சர்களான டியூ குணசேகர, சந்திரசிறி கஜதீர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் அந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஆளுங்கட்சி எம்.பி.யான ரஜீவ விஜேசிங்க வாக்களிக்கவில்லை. எதிரணி உறுப்பினரான ஸ்ரீரங்கா எதிர்த்து வாக்களித்தார். இதன் போது ஐக்கிய தேசியக்கட்சியினர் மேசையில் தட்டி வரவேற்றனர்.

எனினும் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வை.ஜி.பத்மசிறி, அரசாங்கத்துடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

தலைமை நீதிப்தி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான கண்டன பதவிநீக்கத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

நாடாளுமன்ற அவையில் நடந்த வாக்கெடுப்பில் பதவிநீக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்து 155 வாக்குகளும், எதிர்த்து 49 வாக்குகளும் பதிவாகியுள்ளன.

எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் 106 மேலதிக வாக்குகளினால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேரணை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட நிலையில், பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதான தீர்மானத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திட்ட கடிதத்தை பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைப்பார் என்பதே அடுத்தகட்ட நடவடிக்கையாகும்.

அத்துடன், ஜனர்திபதியின் கடிதத்தின்படி பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என இலங்கை அரசியலமைப்பின் 107 (2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்படும் அதிகாரப் பத்திரத்தின் ஊடாக பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்க முடியும் என அரசியலமைப்பின் 107 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியிடம்...

வீரக்கொடியினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த அறிக்கையை பரிசீலனை செய்து, ஜனாதிபதி இறுதித் தீர்மானம் எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டதாக ஜனாதிபதி அறிவிப்பார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

# ஊழியர் சேமஇலாப நிதியத்தில் 902 நிறுவனங்கள் வடக்கில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளை அடுத்து ஊழியர் சேமலாப நிதியத்தில் புதிதாக 902 நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதிய திட்டத்திலுள்ள 3,164 தொழில் நிறுவனங்கள் கடந்த வருடத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் தொழிற் பரிசோதனைகள் அதிகரித்ததன் காரணமாக யாழ். மாவட்டத்தில் 1693, கிளிநொச்சி 359, முல்லைத்தீவு 301, வவுனியா 757, மன்னார் 55 நிறுவனங்கள்மீது பரிசோதனைகள் மேற்கொண்டதுடன், அதில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களும், அங்கத்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றன.

அதனடிப்படையில், வடமாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதிய திட்டத்தில் 902 நிறுவனங்களும் 1781 அங்கத்தவர்களும் இணைந்துள்ளனர்.

இதில், யாழில் 264 நிறுவனங்களில் 854 அங்கத்தவர்களும் வவுனியா 481 நிறுவனங்களில் 333 அங்கத்தவர்களும் கிளிநொச்சி 81 நிறுவனங்களில் 386 அங்கத்தவர்களும் முல்லைத்தீவு 63 நிறுவனங்களில் 156 அங்கத்தவர்களும் மன்னார் 13 நிறுவனங்களில் 55 அங்கத்தவர்களும் புதிதாக அங்கத்துவத்தினை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

## 9 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் 9 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது. இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாலியல் வன்புணர்வுச் சம்பவம் குறித்து கிளிசொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபரைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படு கிறது. (கே)

# சவுதிக்கு பெண்களை அனுப்பாதீர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

ரிசானாவைக் காப்பாற்ற அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி உரிமைகளுக்கான பெண்கள் என்னும் அமைப்பு நேற்றையதினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

சவுதியில் ரிசானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதைக்கூட வெளியுறவு அமைச்சு அறியாமல் இருந்திருக்கிறது, ஆகவே தாம் அதனை வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அமைப்பைச் சேர்ந்த சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்

அத்துடன், இனிமேல் இலங்கை சவுதிக்கு பணிப்பெண்களை அனுப்பக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்

இலங்கை பணிப்பெண்களுக்கு சவுதியில் பாதுகாப்பு கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார். ஆகவே, ஏற்கனவே சவுதி அரேபியாவில் பணியாற்றும் இலங்கை வீட்டுப் பணிப்பெண்களையும் உடனடியாக இலங்கை அரசாங்கம் திரும்ப அழைக்க வேண்டும் என்றும் சரோஜா கூறினார்.

# ரிசானாவின் மரணதண்டனை மனிதாபிமானமற்ற செயல்

## பிரிட்டன் கடும் கண்டனம்



(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு சவுதி அரேபியாவில் கழுத்து வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை கொடூரமான மற்றும் மனிதத்தன்மையற்ற செயல் என பிரித்தானியா கண்டித்துள்ளது.

ரிசானாவிற்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது அதிர்ச்சி மற்றும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் எலிஸ் டயார் பேர்ட் தெரிவித்துள்ளார்.

ரிசானாவிற்கு மரண தண்டனை விதித்ததன் மூலம் சவுதி அரசு சர்வதேச குழந்தைகள் உரிமைகள் சட்டத்தை மீறியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரிசானாவை விடுவிக்குமாறு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் சவுதி அரசு அதனை கணக்கிலெடுக்காது மரண தண்டனை நிறைவேற்றியது கண்டிக்கததக்கது என அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

என்ன குற்றம் செய்திருந்தாலும் மரண தண்டனையை பிரித்தானியா எதிர்ப்பதாக எலிஸ் டயார் பேர்ட் கூறியுள்ளார்.

சவுதியில் மரண தண்டனை விதிப்பு குறித்து பிரித்தானியா தொடர்ந்தும் அந்நாட்டு மனித உரிமை ஆர்வலர்களிடம் அழுத்தம் கொடுத்துவரும் என அவர் தெரிவித்துள்ளார்.

# களனி அமைப்பாளர் பதவி: அமைச்சர் மேர்வின் விலகல்

களனி தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து தற்காலிகமாக பதவி விலகும்படி அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் அப்பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவலவின் கொலை மீதான விசாரணைகள் முடியும் வரை மேர்வினின் தொகுதி அமைப்பாளர் பதவியின் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் அப்பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இதேவேளை மேர்வினின் இப்பதவிக்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷவை தற்காலிகமாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹசித மடவலவின் கொலையுடன் மேர்வின் சில்வாவே தொடர்புபட்டுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

களனி பிரதேச சபை உறுப்பினர்களும் மேர்வின் மீது நேரடியாகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தனர்.

மேலும் இக்கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 5 பேரும் மேர்வின் சில்வாவுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

எனினும் அமைச்சர் மேர்வின் சில்வா இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களனி தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்வதாக பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா வழங்கிய கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்[illegible] என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்தது.

# தொற்றுநோய் பரவாதிருக்க சுகாதாரப் பணிகள் முன்னெடுப்பு

(வவுனியா)

வன்னியில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து அங்கு சுகாதார பாதிப்புக்கள் ஏற்படாதவாறும் தொற்றுநோய்கள் பரவாதிருக்கக் கூடியதுமான சுகாதாரப் பணிகளை முன்னெடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் அமைச்சருமான ரிசாட் பதியுதீன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலளாருக்கே இவ்வாறு பணித்துள்ளார்.

வெள்ளம் குறைவடைந்த போதிலும், தற்போது மீண்டும் மழையுடன் கூடிய காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நோய் பரவும் அபாயமிருப்பதாக தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வவுனியாவில் டெங்கு பரவுவதை தடுப்பதிலும் கவனம் செலுத்துமாறும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் இம்மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு சுகாதாரம் பற்றிய உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பாடசாலை மாணவர்களுக்கு இது குறித்த விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நகர மற்றும் பிரதேசசபைகளின் எல்லைக்குள் நீர் தேங்கி நிற்கும் இடங்கள் குறித்து கவனம் செலுத்தி அவற்றை வழிந்தோடச் செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறும் நகர, பிரதேசசபைகளின் தலைவர்களிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மிரட்டுகிறது டெங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த தொடர் மழையால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் மத்தியில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தொடர் மழையால் கால்வாய்களிலும் குளங்களிலும் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுவதால் டெங்கு நுளம்பு பெருகும் வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. இதனால் டெங்கு நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் டெங்குநோய் தாக்கத்திலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கே)

# எம்.ஜி.ஆர். பிறந்த தினம் யாழில் அனுஷ்டானம்

(திருநெல்வேலி)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் புரட்சி நடிகருமான மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் பிறந்த தினம் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் திருநெல்வேலி சந்திக்கண்மையில் ஆடியபாதம் வீதியில் யாழ். எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாயைச் சேர்ந்த இ.சுந்தரலிங்கம் என்பவரால் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களுக்கும் மாற்று வலுவுடையோருக்கும் கூலித்தொழிலாளர்களுக்குமாக சுமார் 100 பேருக்கு உடுபுடவைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் துறைசார் அறிஞர்களும், அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ். எம்.ஜி.ஆர் இ.சுந்தரலிங்கம் வருடாவருடம் மக்கள் திலகத்தின் பிறந்தநாளன்று ஏழை மக்களுக்கு உடுபுடவைகள் வழங்கி பிறந்தநாள் விழாவை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (137)

# குற்றப்பிரேணை அறிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஐ.தே.க. அறிவிப்பு

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கெதிரான குற்றப்பிரேணையை விசாரித்த நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் அறிக்கையைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ள முடியாதென ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றப்பிரேரனை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரதம நீதியரசருக்கெதிராகச் சுமத்தப்பட்ட 14 குற்றச்சாட்டுக்களையும் 24 மணித்தியாலங்களுக்குள் விசாரித்துள்ளமை உலக சாதனையாகும். இவ்வாறு விசாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.